கனி 3

# புதிய தேடல்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

2025 மார்ச்



## உயிர்ப்பாய் உயிர்துடிப்பாய்...

ஆண்டு சந்தா : 130 | தனிப்பிரதி : 10

# விஜயலெட்சுமி ஸ்டோர்ஸ்
# டெக்ஸ் டைல்ஸ் & ரெடிமேட்

மெயின்ரோடு, மார்த்தாண்டம்.



எங்களிடம் ஆண்களுக்கான பேன்ட், ஷர்ட், கோர்ட் சூட், சபாரிகளும் பெண்களுக்கான எல்லவித மாடல் சுடிதார்களும் மற்றும் மாணவ மாணவிகளுக்கான பள்ளி சீருடைகள், திருமணத்திற்கு தேவையான பட்டுப்புடவைகளும் தரமானதாக கிடைக்கும்.



## புதிய தேடல்

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள் முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள் முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் – 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்**: newputhiathedal@gmail.com

**தனிப்பிரதி : ₹ 10**

**ஆண்டு சந்தா : ₹ 130**

**ஆயுள் சந்தா : ₹ 2000**

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| பலவண்ண அட்டை வெளிப்பக்கம் | : ₹ 12000 |
| பலவண்ண அட்டை உள்பக்கம் | : ₹ 7000 |
| முழுப்பக்கம் கறுப்பு | : ₹ 2000 |
| அரைப்பக்கம் கறுப்பு | : ₹ 1000 |




## ஆசிரியரின் அன்பு வரிகள்


அருள்முனைவர்.

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**


**புதுப்பிறப்படைய புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

*“வலிகள் தகர்த்து விலங்குகள் உடைத்து*
*தடைகள் தாண்டி வலிமையைக் காட்டு”*

கிறிஸ்தவத்தின் மையம் சிலுவை என்னும் தியாகத்தில் நிலைபெறுகிறது. அருள் வாழ்வின் மையம் நற்கருணை எனும் பகிர்வில் வளமை அடைகின்றது. நமது நம்பிக்கை உயிர்ப்பு எனும் விடியலில் பயணப்படுகின்றது.

தவக்காலம் என்பது இயேசுவின் வலிகளை மட்டும் சிந்திக்கும் காலம் அல்ல. மாறாக மீட்பின் வழிகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய காலம். இனிப்பை மறுப்பது அல்ல தவக்காலம்! இதயக் கசப்பைத் துறப்பதே தவக்காலம்!

இந்தத் தவக்காலத்தில் ஜெபமும், நோன்பும், தானமும், மனித நேயச் செயல்களும் நம்மில் நிரம்பி வழியட்டும். மனிதம் விடியலைக் காண, தடைக்கற்களைப் புரட்டித் தள்ளுவோம். எளிய மக்களோடு இணைந்து பயணிக்க, சுயநல ஜன்னல்களை மூடுவோம், பொதுநலக் கதவுகளைத் திறப்போம். இதற்குத் துணை புரியட்டும் நம் தவக்கால விடியலுக்கான தயாரிப்புகள்.

எந்த ஓர் இருளுக்கும் விடியல் எனும் நம்பிக்கை உண்டு என்பதை உயிர்ப்பு உரக்கச் சொல்கிறது. போதை, பாலியல் வன்கொடுமை, இயற்கைச் சீரழிப்பு, அதிகார ஆணவம், ஆட்சியாளர்களின் அடக்கு முறை, சுயநல இறுக்கம், போட்டி பொறாமை போன்ற அடிமை வாழ்க்கையை விட்டுவிட்டு, புதுவாழ்வு வாழ உயிர்ப்பு நம்மை அழைக்கின்றது.

புதுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையை உயிர்ப்பு தருகிறது. இந்த உயிர்ப்புதான் இயேசு இறைமகன் எனும் உறுதியை நமக்கு அளிக்கிறது. நமது வாழ்க்கையும் உயிர்த்த இயேசுவைப் பிரதிப்பலிக்கட்டும். மனிதத்தின் வெளிச்சத்தை மண்ணகம் எங்கும் பரப்பட்டும். எல்லோரும் வாழ்வு பெற நம்பிக்கையை விதைக்கட்டும். உயிர்த்துடிப்பாய் தளிர்ப்போம். கனிதர உயிர்ப்போம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல் வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்.**

**"நன்மைகள் புரிய நல்மனமும் மனத்துணிச்சலும்தான் தேவை"**

வாழ்க்கையின் தரம் அகத்தூய்மையில்தான் நிர்ணயமாகிறது. வாழ்வை மிகத் தெளிவாக உள்ளொளிப் பயணத்தில் பார்க்கத் தொடங்குவதே ஆன்மீகம். மனித ஆற்றலைச் சிகரத்திற்கு எடுத்து செல்ல ஆற்றல் மிக்கது மனம். மனிதர்கள் தங்கள் இறைத் தன்மையை உணர்ந்து மனிதநேயத்தை வெளிப்படுத்த உதவுவதே தவக்காலத்திற்கான நோக்கம்.

அன்பால் இந்த உலகத்தையே வெல்ல முடியும். அதைத்தான் இயேசு நமக்குப் போதித்தும் வாழ்ந்தும் காட்டியுள்ளார். மனிதநேயம் பாரெங்கும் செழிக்க அன்பும் அமைதியும் மனித இனத்தின் அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்து, சென்ற இடமெல்லாம் போதித்தவர், வாழ்ந்தவர். ஒவ்வொரு மனிதனிலும் எல்லையில்லா ஆனந்த நிலையில் அனுபவித்து, பிறரும் அதனை உணர்ந்து வாழ நற்கருணையில் தம்மைக் கொடையாகத் தந்துள்ளார்.

சிலுவை அனைத்திலிருந்தும் மனிதனுக்கு விடுதலை அளிக்கும். நாம் செய்த மொத்த பாவத்திலிருந்தும் நம்மை விடுவித்த மீட்பின் கருவி சிலுவைதான். சிலுவையின் துணை கொண்டு உலகத்தில் உள்ள அனைத்து மனித இதயங்களையும் ஒன்றிணைக்கும் பணியை ஆரம்பிக்க வேண்டும்.

இயேசுவின் உயிர்ப்பின் மூலம் நாமும் நமது பாவ வாழ்வில் இருந்து உயிர்த்தெழ வேண்டும். அநியாய வட்டி வாங்கிய சக்கேயு மனமாறி ஒன்றுக்கு ஐந்து மடங்காகத் திருப்பிக் கொடுத்தது போன்ற மனமாற்றம் நம்மில் உருவாக வேண்டும். கெட்ட குமாரனிலிருந்து தீய செயல்கள் அனைத்தும் ஒழிந்து முழுமையாக மனம் மாறியது போன்று ஒரு புதிய உயிர்த்தெழுதல் நம்மில் மலரட்டும்.

வாழ்க்கை நிறைவாக அமைய நம் உள்ளங்களைத் தயாரிப்பதே தவக்காலம் மற்றும் புனித வார நிகழ்வுகள். இதனை நிலையாகப் பெற்றுக்கொள்ள அழைப்பதே உயிர்ப்பு. உயிர்ப்புடன் வாழ்தல் என்பது அசாதாரணமான நிகழ்வு. உயிர்ப்புடன் இருத்தல் இப்பூமியில் மட்டுமல்ல உலகிலேயே அபூர்வமான செயல். இதனை ஆண்டவர் இயேசு நிகழ்த்தியுள்ளார். அவரோடு இணைந்து நாமும் உயிர்ப்போம் உயிர்த்துடிப்போடு வாழ்வோம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

மேதகு ஆயர் **ஆல்பர்ட் அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்ட ஆயர்.

கனி 03 அகல் 15 மார்ச் 2025

| எண் | படைப்பு |
|---|---|


1. ஆசிரியரின் அன்பு வரிகள்
2. ஆயரின் அமுத மொழிகள்
3. உயிர்ப்பாய்... உயிர்த்துடிப்பாய்
4. அம்மா எனும் அற்புதம்
5. நீர்த்துளி உயிர்த்துளி
6. பழையன நினைத்து பதற்றமடையக் .. கூடாது
7. இயேசுவின் பாடுகள் : வலிகளிலிருந்து வலிமைக்கு
8. வாழ்க்கை பயணமாக... புனிதமாக...
9. இயற்கையின் பாதையில் பரிசளைக்.. காப்போம்.
10. உயிர்ப்பாய் உயிர்த்துடிப்பாய்
11. உயிர்ப்பு நமதாக... எதிர்பார்ப்பு குறையட்டும், எதிர்நோக்கு ஆழப்படட்டும்.
12. நற்கருணை – நினைவுகூர்தலும் கையளித்தலும்
13. அம்பேத்கர் விரும்பிய இந்தியா
14. உலகை உயர்விக்கும் உயிர்ப்பு
15. பரவட்டும் பகிர்தல் பண்பாற்றல்
16. பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
17. ஆயரின் அலுவல்கள்

# உயிர்ப்பாய்... உயிர்த்துடிப்பாய்

அருள்பணி. **இரா. மேரி ஜாண்**

**சிறார் பக்கம்**

கலைச்செல்வனும் கலைச்செல்வியும் அண்ணன் தங்கைகள். இருவருக்கிடையிலும் நெருங்கிய சகோதர அன்பு நிலவியது. அவ்வப்போது இருவரும் சிறிய சிறிய சண்டைகள் போட்டாலும் உடனே அவற்றை மறந்து மீண்டும் சேர்ந்து விளையாடுவார்கள், சேர்ந்து படிப்பார்கள், சேர்ந்து வீட்டு வேலைகளையும் செய்வார்கள்.

அவர்களுடைய வீட்டின் பின்புறத்தில் ஒரு பெரிய மரம் நின்றது. அதில் ஏராளமான கிளைகள் இருந்தன. வெயில் நேரத்தில் அவை நல்ல நிழல் தந்தன. அந்தக் கிளைகளில் சில மிகவும் தாழ்வாய் இருந்தன. நல்ல உறுதியாயும் இருந்தன. கலைச்செல்வனும் கலைச்செல்வியும் விளையாடுவதற்கும் படிப்பதற்கும் மிக ஏற்றதாய் அந்த மர நிழலும் மரக் கிளைகளும் அமைந்திருந்தன. அந்தக் கிளைகளில் ஏறி அமர்ந்துகொண்டு படிப்பார்கள். அப்படி அந்த மரம் அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பனாய் இருந்தது.

மரத்திலிருந்து உதிர்கிற சருகுகளை இருவருமாகச் சேர்ந்து ஒவ்வொரு நாளும் அப்புறப்படுத்தி அந்த இடத்தைத் தூய்மையாக வைத்திருப்பார்கள்.

ஒரு நாள் இருவரும் பள்ளிக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினர். வீட்டின் பின்புறம் மிக வெளிச்சமாய் இருந்ததைக் கவனித்தனர். புத்தகப் பையை வைத்துவிட்டு இருவரும் வீட்டின் பின்புறமாகச் சென்றனர். அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர்களுடைய நண்பனாகிய அந்த மரத்தைக் காணவில்லை! அது நின்ற இடத்தில் மண் வெட்டப்பட்டு மீண்டும் மூடப்பட்டிருந்தது. மரத்தின் பச்சை இலைகள் சில அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடந்தன. மேலும், மரத்தின் வெட்டப்பட்ட சிறு துண்டுகளும் சிதறிக் கிடந்தன. ஆம். அந்த மரத்தை வெட்டிக்கொண்டு போயிருந்தனர். குழந்தைகளுக்கு அழுகையை அடக்க இயலவில்லை. ஆருயிர் நண்பரை இழந்ததுபோல் தவித்தனர். வீட்டுக்குள் ஓடிச் சென்று அம்மாவிடம் அழுதுகொண்டே கேட்டனர்: “அம்மா, எங்கள் மரம் எங்கே?” குழந்தைகளின் அழுகையைக் கண்ட அம்மாவுக்கும் அழுகை வந்தது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, குழந்தைகள் இருவரையும் அரவணைத்துக்கொண்டு சொன்னார்: “போகட்டும் மக்களே, மரம்தானே. நமக்கு இன்னும் மரம் நட்டு வளர்க்கலாம்.”

“எங்கள் மரம் எங்கே போனது என்று சொல்லுங்கள்” என்று குழந்தைகள் மீண்டும் கேட்டனர்.



“நமக்குப் பணம் தேவைப்பட்டது. அதனால் அப்பா அந்த மரத்தை விற்றுவிட்டார். அதனை வாங்கியவர்கள் வந்து வெட்டிக்கொண்டு போய்விட்டனர்” என்றார் அம்மா.

“எங்கள் மரம் அல்லவா அது? எங்களிடம் ஏன் கேட்கவில்லை?” என்று குழந்தைகள் கேட்ட கேள்விக்கு அம்மாவால் பதில் சொல்ல இயலவில்லை. கண்களில் கண்ணீர்தான் வந்தது. அதைக் கண்ட குழந்தைகள் இன்னும் அம்மாவை வருத்தப்படுத்த விரும்பவில்லை. தங்கள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே வீட்டின் பின்புறம் உள்ள வாசல் படியில் அமர்ந்து அவர்களுடைய மரம் நின்றிருந்த இடத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

வெளியில் சென்றிருந்த அவர்களுடைய அப்பா வந்தார். அவரிடம் குழந்தைகள் பேசவில்லை. அவருடைய



முகத்தையும் பார்க்கவில்லை. அப்பாவுக்கு அதன் காரணம் புரிந்துவிட்டது. அவர்களுக்கு அவர் வாங்கிக்கொண்டு வந்திருந்த தின்பண்டத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களைத் தேற்ற முயன்றார். “மரம் விற்ற காசுக்கு வாங்கிய தின்பண்டம் எங்களுக்கு வேண்டாம். நீங்களே சாப்பிடுங்கள்” என்றனர். அன்று இரவும் எதுவும் சாப்பிடாமல் தூங்கிவிட்டனர். அதனால் பெற்றோர் மிகவும் வருந்தினர். “குழந்தைகள் மிகவும் வருத்தத்தில் இருக்கிறார்கள்” என்று அம்மா அப்பாவிடம் சொன்னார்.

நாள்கள் கடந்தன. அந்த மரம் இல்லாததை அந்தக் குழந்தைகள் சிறிது சிறிதாய் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தனர். மழை பெய்து, புற்கள் முளைத்து, மரம் நின்றிருந்த இடம் அடையாளம் தெரியாமல் போனது. குழந்தைகள் மரத்தை மறக்கவும் தொடங்கியிருந்தனர்.

ஒரு மாதம் கடந்த பிறகு ஒரு நாள் காலையில் வீட்டின் பின்புறத்திலிருந்து கலைச்செல்வியின் குரல் கேட்டது: “அண்ணா, இங்கே வா, ஓடி வா, வந்து பாரேன்.”

“என்ன தங்கச்சி?” என்று கேட்டுக்கொண்டே அண்ணன் அவளிடம் வரலானான். “அண்ணா, மரம் உயிர்க்குமா?” என்று தங்கை மீண்டும் கேட்டாள்.

அண்ணன் ஓடி வந்து பார்த்தான். மரம் நின்றிருந்த இடத்தில் அதன் வேரிலிருந்து முளைத்த ஓர் இளங்கன்று மண்ணிலிருந்து வெளியே வந்து இரண்டு இளம் இலைகளை விரித்திருந்தது.

“ஆமா தங்கச்சி! நம்முடைய மரம் உயிர்த்துவிட்டது. இனி வேகமாக வளரும். கொஞ்ச நாளில் நமக்கு மீண்டும் நம் மரம் கிடைத்துவிடும்” என்று சொல்லித் துள்ளி மகிழ்ந்தனர்.

உயிருள்ள எல்லாமே மீண்டும் உயிர்தெழும். அந்த உயிர்ப்பு உயிர்த் துடிப்பாக மாறும். எதையும் இழந்துவிட்டோம் என்று கவலைப்பட வேண்டாம். மீண்டும் கண்டடைவோம். அது நம் மகிழ்ச்சியைப் பல மடங்காக்கும்.



# அம்மா எனும் அற்புதம்

**சேவியர்,** பரக்குன்று

அம்மா.
**உன்னை உச்சரிக்கும்**
**போதெல்லாம் எனக்குள் நேசநதி**
**அருவியாய் அவதாரமெடுக்கிறது.**

எனத் தொடங்கும் என்னுடைய கவிதை ஒன்று கல்லூரிப் பாடத் திட்டம் ஒன்றில் பயன்படுத்தப்பட்டது. அம்மாவின் நிகரற்ற அன்புக்கு அதை நான் அர்ப்பணித்தேன்.

அம்மா எனும் உறவுதான், எந்த சமரசங்களும் இன்றி எல்லோருடைய வாழ்க்கையிலும் முதல் இடத்தைப் பிடிக்கும். மனிதர்கள் என்றில்லை, எல்லா உயிர்களுக்குமே அன்னையின் அன்புதான் முதலிடம். பிற்காலங்களில் மனைவி, பிள்ளைகள் என நமது அன்பு வளையத்துக்குள் உற்சாக மின்னல்கள் நிரம்பினாலும், அம்மா எனும் அன்புக்கு மாற்றாக இதயம் எதையும் எடுத்துக் கொள்வதில்லை. நமது கடைசி மூச்சுவரை அம்மாவுக்கான இடம் தனிமையாய், நெகிழ்வாய் நம்மிடம் பயணித்துக் கொண்டே இருக்கும்.

அம்மாதான் ஓர் இல்லத்தின் தூண். வயதான நிலையில், நடமாட முடியாமல் ஓர் இருக்கையில் அமர்ந்திருந்தால்கூட ஒரு மிகப்பெரிய பலம் நமக்கெல்லாம் இருக்கும். அந்தப் பலவீனமான அன்னை விடை பெற்றபின் எல்லாமே கலைந்து போனதாய், வெறுமைக்குள் நம்மைத் தள்ளிவிட்டதாய் ஒரு சோகம் நம்மை வந்து பற்றிக் கொள்ளும்.

அம்மாதான் நம் பார்வையில் படுகின்ற முதல் உலகம். நமது வாழ்க்கையில் உணர்கின்ற முதல் அன்பு. நமது பயணத்தில் வருகின்ற முதல் தோழி. நமது வாழ்வினில் வருகின்ற முதல் ஆசான். நமது துயரங்களில் வருகின்ற முதல் ஆறுதல். நமது வெற்றிகளில் கிடைக்கின்ற முதல் பரவசம். நமது தோல்விகளில் கிடைக்கின்ற முதல் உற்சாகம். அன்னையே எல்லாம். அன்னையும் அன்னை சார்ந்தவையுமே நமது வாழ்வின் எல்லைக் கோடுகளாய் அமைந்து விடுகின்றன.



எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் அன்பு செலுத்துவது ஒன்றையே மகிழ்ச்சியாய் செய்கின்ற ஒரே ஜீவன் அம்மாதான். சுயநலத்தின் கடுகு முனையளவு கூட ஒரு தாயன்பில் நாம் கண்டு கொள்ள முடியாது. பிள்ளைகளின் ஒவ்வொரு சிறு சிறு மகிழ்விலும் பெருமகிழ்ச்சி அடைவது அன்னை மட்டுமே!

அன்னையின் அன்பை இறைவனின் அன்போடு ஒப்பிட்டு நாம் பல வேளைகளில் பேசுவோம். சற்றே ஆழமாய்ச் சிந்தித்தால் இறைவனின் அன்பின் சாயலை நாம் அன்னையின் அன்பில் கண்டு கொள்ள முடியும். 'கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாததால், தாயை உருவாக்கினார்' எனும் பழமொழி மிகப் பிரபலம். எப்படி இறையன்பின் சாயல் அன்னையிடம் வெளிப்படுகிறது?

வரையறையற்ற அன்பு! இறைவனும் தாயும் மட்டும்தான் நமது குறைகளோடு நம்மை ஏற்றுக் கொள்பவர்கள். மற்றவர்கள் எல்லோரும் நாம் அவர்களுக்குப் பிடித்தமானவர்களாய் மாறினால் மட்டுமே நம்மை அன்பு செய்வார்கள். நாம் காயப்படுத்தினாலும், நாம் விலகினாலும் நம்மைத் தொடர்ந்து அன்பு செய்வது இறைவனும் அன்னையும் மட்டுமே

தியாக அன்பு! தமது ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார் கடவுள். தியாகத்தின் உச்சம் அது! ஓர் அன்னை தனது அத்தனை கனவுகளையும், சுகங்களையும், நலன் களையும் பிள்ளைகளுக்காய்த் தியாகம் செய்கிறார். பிள்ளைகளுக்காய்த் தியாகம் செய்வதைப் பெருமகிழ்ச்சியுடன் செய்கிறார். அங்கே இறைவனும் அன்னையும் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.

முடிவிலியாய் மன்னிப்பு! ஓர் அன்னை எந்த விதமான வெறுப்பையோ, விரோதத் தையோ இதயத்தில் சுமப்பதில்லை. பிள்ளைகள் என்ன செய்தாலும் மன்னிக்கும் கதவைத் திறந்தே வைத்திருப்பார். இறைவனின் மகத்துவமான மன்னிப்பைப் போலவே அன்னையும், மறுக்காத மன்னிப்பை எப்போதுமே பிள்ளைகளுக்கு அளிக்கிறார்.

எப்போதுமே கவனிப்பு! கடவுள் நம்மை உள்ளங்கையில் வரைந்து வைத்திருப்பது போல, பிள்ளைகளை இதயத்தில் வரைந்து வைத்திருப்பவர் அன்னை. பிள்ளைகளுக்காய்த் தொடர்ந்து செபிப்பது, அவர்கள் நலன்களையே நினைப்பது, அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வது என ஓர் அன்னையின் தொடர் கவனிப்பு இறைவனின் பேரன்பின் அரவணைப்பைப் போன்றது!

தேவைகளை நிறைவேற்றும் அன்பு! இயேசு கிறிஸ்துவின் மூலம் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றும் இறைவனைப் போல, அன்னையும் பிள்ளைகளின் தேவைகளைத் தேடித் தேடி நிறைவேற்றுபவராய் இருக்கிறார். இறைவனைப் போல நாம் பிறக்கும் முன்பே நம்மை அன்பு செய்கின்ற ஜீவன் அம்மாதான்!

ஆறுதலின் அன்பு! இறைவனை ஆறுதலின் தேவன் என்கிறது விவிலியம். அன்னையும் ஆறுதலின் மிகப்பெரிய கரமே. அன்னையின் கரத்தைப் போன்ற ஆறுதலை வேறெந்தக் கரமும் தரமுடியாது என்றார் இளவரசி டயானா. எந்தக் கணத்திலும் பிள்ளைகளுக்கு ஆறுதலைத் தர மறுப்பதே இல்லை அன்னை! இறைவனின் பிரதிநிதியாய் ஆறுதலின் வாய்க்காலாய் இருக்கிறார் அன்னை!

உடையாத பேரன்பு! இறைவனின் பேரன்பிலிருந்து நம்மை யாரும் பிரிக்க முடியாது என்கிறது பைபிள். ஓர் அன்னையின் பேரன்பிலிருந்தும் நம்மை யாருமே பிரிக்க முடியாது. ஒவ்வொரு கணத்திலும் அன்பைப் பொழிந்து, பிள்ளைகள் விலகிச் சென்றாலும் கூட கொஞ்சமும் குறையாமல் நேசிப்பது அன்னையின் இயல்பு. என்னதான் சூழல் வந்தாலும் அன்னை தம் பிள்ளைகளோடான உறவை உடைத்துக் கொள்வதில்லை.

சரிசெய்யும் அன்பு! இறைவன் நம்மைக் கண்டித்துத் திருத்துகிறார் என்கிறது எபிரேயர் நூல். ஓர் அன்னையும் தமது பிள்ளைகள், வழி விலகும்போது அவர் களுக்குச் சரியான வழியைக் காட்டுகிறார். பிள்ளைகள் திருந்தி வரும்வரை சொல் லொண்ணாத் துயரத்தை அனுபவிக்கிறார். பிள்ளைகளை நல்வழிப்படுத்தி, நிலைவாழ்வில்

அழைத்துச் செல்ல விரும்பும் இறைவனைப் போலவே அன்னையும் பிள்ளைகளைச் சரி செய்து கவனிக்கிறார்.

பொறுமையின் அன்பு! கடவுள் கோபம் கொள்ளத் தாமதிக்கிறார், மிகுந்த அன்பு உடையவராக இருக்கிறார் என்கிறது திருப்பாடல்கள். ஓர் அன்னையும் அப்படியே! பிள்ளைகளின் தவறுகளுக்குப் பொறுமை காக்கிறார். அவர்களின் அத்தனை தவறுகளையும், பிழைகளையும் அமைதியாய் எதிர்கொள்கிறார். தமக்கு எதிராய் இருக்கும் பிள்ளைகளையும் பொறுமையுடனும், அன்புடனும் அரவணைக்கிறார். இறைவனின் பொறுமையை அன்னை தத்தெடுத்துக் கொள்கிறார்.

வலிகளைத் தாங்கும் அன்பு! பிரசவ வேதனை தொடங்கி, தூக்கமற்ற இரவுகளில் தொடர்ந்து, அனைத்தையும் பிள்ளைகளுக்காய் விட்டுக் கொடுப்பதில் வளர்ந்து, பிள்ளைகளின் சுய துக்கங்களைத் தன்மேல் சுமத்தி எப்போதுமே பிள்ளைகளுக்காய் வலிகளைத் தாங்குகிறார் அன்னை, மனுக்குலத்துக்காய் வலிகளைத் தாங்கிய இயேசுவைப் போல!

இப்படி இறைவனின் இயல்புகளை அன்னையும் தமக்குள் பதியம் போட்டிருக்கிறார். அன்பு எனும் வார்த்தைக்கு ஒரு விளக்கம் இருந்தால் அதை அன்னை என மொழிபெயர்க்கலாம். இறைவன் அன்பாக இருக்கிறார், அன்னை அன்போடு இருக்கிறார். மருத்துகள் குணமாக்காத எந்த ஒரு நோயையும் அன்னையின் அரவணைப்பு குணமாக்கிவிடும். நமது கனவுகளை நிறைவேற்ற தமது கனவுகளைப் படுகொலை செய்யும் அன்பின் இதயம் அன்னையே!

அந்த அன்னையை அன்பு செய்வதும், மதிப்பதும், நேசிப்பதும், உயிராய்ப் பாதுகாப்பதும் நமது கடமை. அவர்களுக்கு மன வருத்தம் வராமல் மகிழ்வை மட்டுமே வழங்குவது நமது அழைப்பு. அதற்கு நாம் பெரிதாக எதையும் செய்ய வேண்டியதில்லை. அன்னையின் அருகே அவரின் கரம் பிடித்து அமர்ந்திருந்தால் போதும். அவர் சொல்லும் கதைகளை ஆர்வமுடன் கேட்டு ரசித்தால் போதும். அவருடைய சின்னச் சின்ன ஆசைகளை அவர் சொல்லாமலேயே நிறைவேற்றிக் கொடுத்தால் போதும். அவருடைய பேரன்பை மதித்து அரவணைத்தால் போதும்

அன்னையர் நம்மிடம் இறைவன் தந்திருக்கும் பேரன்பின் நதிகள். அவர்கள் வாழும்போதே அவர்களை நேசிப்போம். அவர்களுடைய கனவுகளுக்குக் கவரி வீசுவோம். அவர்களுடைய புன்னகைக்கு உத்தரவாதம் தருவோம். அவர்களுடைய கவலைகளுக்குக் கொள்ளி வைப்போம். ஏனெனில் அவர்கள் விலகிவிட்டபின் நம்மிடம் செலவிட நேரம் இருக்கும், அன்னையின் கரம் இருக்காது. காதுகள் இருக்கும் அன்னையின் குரல் இருக்காது. செல்வம் இருக்கும் அன்னைக்குக் கொடுக்க முடியாது! எனவே அவர்கள் வாழும்போதே அவர்களைத் திகட்டத் திகட்ட நேசிப்போம், அவர்களின் சிரிப்பில் நம் வாழ்க்கையைச் செதுக்குவோம்

## அன்பு

**அன்புதான்**
**அமைதியின் சிகரம்**
**அந்த அன்புக்கு**
**ஆணி அடித்தால்**
**அகிலம் தாங்குமா?**

**ம. டேவிட் டிலன்**
முளகுமூடு

# நீர்த்துளி உயிர்த்துளி

சிகரம். **செபா**

1993-ம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 22-ம் நாள் உலகத் தண்ணீர் தினமாகக் (World Water Day) கொண்டாடப்படுகிறது. தண்ணீரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 2030-க்குள் எல்லோருக்கும் பாதுகாக்கப்பட குடிநீர் மற்றும் சுகாதாரம் என்ற ஐ.நா சபையின் நிலையான வளர்ச்சி இலக்கு 6-ஐ அடைவதற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படவும் உலகத் தண்ணீர் தினம் கொண்டாடப்படுகிறது. 2025-ம் ஆண்டு உலகத் தண்ணீர் தினத்துக்கான கருப்பொருள் பனிப்பாறைகள் பாதுகாப்பு (Glacier Preservation) என்பதாகும்.

**நீரின்றி அமையாது உலகம்**

“நீரின்றி அமையாது உலகம்”- பைந்தமிழ் புலவன் வள்ளுவன் வகுத்துத் தந்த மிக அடிப்படையான அறிவியல் மற்றும் வாழ்வியல் கோட்பாடு என்றே சொல்லலாம். எனவேதான் ஒவ்வொரு நீர்த்துளியும் உயிர்த்துளி என்கிறோம். இந்தப் பிரபஞ்சத்தில் நீர் இல்லாத இடத்தில் உயிர்கள் வாழ இயலாது. பூமியில் நீர் இருப்பதலாயே உயிர்கள் வாழ்கின்றன. பூமியில் ஓர் இடத்தில் நீர் இல்லாத சூழல் ஏற்பட்டால் அது பேரழிவை ஏற்படுத்தும். உயிர்கள் வாழ வளர நிலைத்த வளர்ச்சி காண நீர் அடிப்படையான வாழ்வாதாரம்.



**தண்ணீர் அடிப்படை உரிமை**

மனிதர்கள் இப்பூமியில் மாண்போடும், உரிமையோடும் வாழவும் நிறைவளர்ச்சி (Sustainable Development) காணவும் தண்ணீர் மிக முக்கியம். எனவேதான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மனிதனின் அடிப்படை உரிமை, அதை உத்தரவாதப்படுத்த வேண்டியது ஆளும் அரசுகளின் அறம்சார் கடமை என்று கூறப்படுகிறது. தண்ணீர் வியாபாரப் பொருள் அல்ல. சந்தைச் சரக்குமல்ல. தண்ணீர் வாழ்வின் ஆதாரம் மற்றும் நலவாழ்வின் உலகளாவிய அடையாளம்.

**தண்ணீரின் முக்கியத்துவம்**

மனிதன் உயிர் வாழ மட்டுமல்ல மனிதனுக்கு தேவையான உணவு உற்பத்தி, பொருள் உற்பத்தி மற்றும் சுகாதார வாழ்வுக்கும் தண்ணீர் அடிப்படைத் தேவையாக இருக்கிறது. தண்ணீர் இல்லையென்றால் பூமியில் எந்த வாழ்வுச் செயல்பாடுகளும் நடக்க இயலாது. எல்லோருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்பது வறுமை ஒழப்பு, பாலின சமத்துவம், எல்லோருக்கும் நல வாழ்வு, எல்லோருக்கும் கல்வி என்ற ஐ.நா வளர்ச்சி இலக்குகளோடு நெருங்கிய தொடர்புடையது. தண்ணீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை என்பது சீரான காலநிலை, பூமி வெப்பமாதல் குறைப்பு, மனித சமுதாய வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றோடும் நெருங்கிய தொடர்புடையது.

**பூமியில் தண்ணீர்**

நாம் வாழும் பூமியில் எழுபது விழுக்காடு தண்ணீர்தான். இதில் 97.5 விழுக்காடு கடல் நீர் 2.5 விழுக்காடு நன்னீர்.

அதிலும் மூன்றில் ஒரு பங்கு பனிக்கட்டிகளாக உள்ளன. இந்தச் சிறிய அளவிலான நன்னீரையே உலக மக்கள் அனைவரும் பயன்படுத்தி நிலைத்த வளர்ச்சி நோக்கிப் பயணிக்க வேண்ணடியிருக்கிறது.

**மனித உடலில் தண்ணீர்**

ஒவ்வொரு மனிதனுடைய உடலிலும் ஏறக்குறைய 75 விழுக்காடு தண்ணீர். அதாவது ஒரு மனித உடலில் 42 லிட்டர் தண்ணீர் இருக்கிறது என்கிறார்கள். இதில் 2.7 லிட்டர் குறைந்தாலும் நீர்வற்றிப் போதல், எரிச்சல், நடுக்கம், தலைவலி, மயக்கம் போன்றவை ஏற்படலாம். நம் உணவில் உள்ள சத்துகளை உடல் உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லவும் உடல் இயங்கவும் தண்ணீர் அவசியம். நம் உடலையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க தண்ணீர் இன்றியமையாதது.

**எதிர் கொள்ளும் சவால்கள்**

பூச்சிகொல்லி மருந்துகள், இரசாயன உரங்கள், தொழிற்சாலை மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் தண்ணீர் மிக வேகமாக மாசடைந்து வருகிறது. நிலைத்த நீர் மேலாண்மை இல்லாததால் நிலத்தடி நீர் மிக வேகமாகக் குறைந்து வருகிறது. பல இடங்களில் கடல்நீர் புகுந்து நீர் உவர்ப்புத் தன்மை பெற்று வருகிறது. காலநிலை மாற்றத்தால் பெருவெள்ளம் அல்லது பெரும் வறட்சி போன்ற பேரிடர்கள் ஏற்படுகின்றன. பூமி வெப்பமாதலினால் பனிப்பாறைகள் உருகுவதால் நீர் சுழற்சி மாறுபாடுகள் மற்றும் கடல் மட்டம் உயருதல் போன்ற சவால்களைச் சந்திக்க வேண்டி யிருக்கிறது.

உலகில் மூன்றில் ஒருவர் பாதுகாப்புக் குடிநீரைப் பருகுகிறார். இதனால் இவர்களின் நிலவாழ்வு பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகிறது. 2050-ம் ஆண்டிற்குள் உலக மக்கள் தொகை 940 கோடிக்கும் 1,020 கோடிக்கும் இடையில் இருக்கும் எனக் கணிக்கப்படுகிறது. காலநிலை மாற்றம், சீரான பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் இன்மை ஆகியவற்றால் 500 கோடி பேர் கடும் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்வர் என்றும் கணிக்கப்படுகிறது.

**2023 மையக்கருத்து**

2023-ம் ஆண்டு உலகத் தண்ணீர் தின மையக் கருத்து “பனிப் பாறைகள் பாதுகாப்பு” என்பதாகும். பூமியில் தண்ணீர் பாதுகாப்பில் பனிப்பாறைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. பனிப்பாறைகளிலிருந்து பெரும்பாலான ஆறுகள் உற்பத்தியாகி விவசாயம் செழிக்கவும். நிலத்தடி நீர் பாதுகாப்பிற்கும் உதவி செய்கின்றன.

பூமி வெப்பமயதலால் பனிப்பாறைகள் மிக வேகமாக உருகி வருகின்றன. இதனால் பூமி சுருங்கி வருகிறது. பூமி சுருங்கி வருவதால் நீர் சுழற்சி கணிக்க முடியாத அளவு மிகத் தீவிரமாகி வருகிறது. பனிப்பாறைகள் வேகமாக உருகும்போது நீரோட்டங்கள் மாறுவதோடு இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட வாய்ப்பு அதிகரிக்கிறது என்கிறார்கள் அறிஞர்கள். பனிப்பாறைகள் பாதுகாப்பு என்பது நீர் மேலாண்மையின் மிக முக்கியமான அங்கம் எனப்படுகிறது. பசுமைக்குடில் வாயுக்கள் வெளிறேற்றத்தைக் குறைப்பது, அதே நேரத்தில் உருகும் நீரைப் பயனுள்ள வகையில் மேலாண்மை செய்வதற்கான திட்டங்கள் தேவைப்படுகின்றன.

**நமது கடமை**

கிறிஸ்தவ ஆன்மீகத்தில் தண்ணீர் உயிரளிக்கும் ஊற்றாக, புதுப்பிக்கும் ஆற்றல் படைத்தாக அடையாளப்படுத்தப்படுகிறது. எனவே, நீர்த்துளி உயிர்த்துளி என்கிற கோட்பாட்டை எல்லோரிடமும் கொண்டு செல்ல வேண்டும். தண்ணீரின் சிறப்பு, முக்கியத்துவம், குறிப்பாகப் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் மனித உரிமை என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தண்ணீர் மாசுபடுதலைக் குறைக்கவும், நீராதரங்களைப் பேணிக் காக்கவும், நிலத்தடி நீர் மேம்படவும், பூமி வெப்பமாதலைக் குறைக்கவும், இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இது நம் ஆன்மீகக் கடமையாகி மாற வேண்டும்.



# பழையன நினைத்து பதற்றமடையக் கூடாது

தமிழறிஞர் புலவர் **மு. அருளப்பன்**

ஒவ்வொருவர் வாழ்விலும் ஒவ்வொரு விதமான அனுபவங்கள் பெற நேரிடும். அது இன்பத்தைத் தருவதாகவும் இருக்கும். துன்பத்தைத் தருவதாகவும் அமைந்திருக்கும். அதில் ஏமாற்றங்களும், தோல்விகளும் கலந்ததாகவும் இருக்கும்.

ஆனால் அத்தகைய பழைய அனுபவ நிகழ்வுகளை எண்ணிப் பதற்றப்படக் கூடாது. தேவையற்ற பழைய நினைவுகளைத் தூக்கி எறிந்துவிட்டுப் புதிய விடியலைத் தேடி உயிர்ப்பாய் உயிர்துடிப்பாய் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டும்.

வேண்டாத பழைய நினைவுகள் நமது வாழ்க்கைக்கு வேட்டு வைப்பதாக அமையலாம். நம்மை முன்னேற விடாமல் சஞ்சலத்தில் மூழ்கடித்து வாழ்வின் அர்த்தத்தை அடைய விடாமல் திக்குமுக்காடச் செய்யலாம்.

எனவே, பழையன நினைத்து பதற்றப்படாமல் கிடைக்கும் புதிய வாய்ப்பை மனதார ஏற்றுக்கொண்டு செய்யும் செயலில் கண்ணும் கருத்துமாய் ஈடுபட வேண்டும். வேண்டாத நினைவுகள் கவனச்சிதறலில் ஈடுபடுத்தி முன்னேற்றப் பாதையைத் தடுத்து விடும்.

ஓர் ஆட்டோ ஓட்டுநர் அன்றுதான் முதன் முதலில் ஆட்டோ ஓட்டுகிறான். அதற்கு முன்பு அவன் அமரர் ஊர்தி ஓட்டி வந்தான். அன்று அவனது ஆட்டோவின் பின் இருக்கையில் அமர்ந்து ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அந்த ஆட்டோ ஓட்டுநர் பேசாமல் அமைதியாக அந்த ஆட்டோவை ஓட்டிச்சென்று கொண்டிருந்தான். அப்போது அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் பேச விரும்பிய பின் இருக்கையில் அமர்ந்திருந்த பயணி ஆட்டோ ஓட்டுநரின் தோளை மெதுவாகத் தட்டினார்.

உடனே, அவன் பயந்து நடுங்கினான். அந்தப் பயணி "நான் சும்மாதானே உங்க தோளில் தட்டினேன். நீங்க இப்படி நடுங் குறீங்களே?" என்று அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் ஆச்சரியத்துடன் கேட்டார்.

அதற்கு அந்த ஆட்டோ ஓட்டுநர், "அய்யா நான் இதுவரை இறந்து போன உடல்களை ஏற்றும் அமரர் ஊர்தி ஓட்டி வந்தேன். இன்னிக்குத்தான் இந்த ஆட்டோவை ஓட்டறேன். அதனால் நான் நீங்க தொட்டதைத் தவறுதலாகப் பிணம்தான் தொடுகிறதாக நெனச்சு பயந்து நடுங்கினேன்" என்று கூறினான்.

அதைக் கேட்டு அந்தப் பயணிக்குச் சிரிப்பு வந்தாலும் அவர் அவனுக்கு ஆறுதலும், அறிவுரையும் வழங்கினார். "தம்பி நீ செய்து வந்த தொழில் மூலம் நீ புதிய அனுபவமோ, வாழ்க்கையை வெற்றியோடு வாழக்கூடிய தைரியத்தையோ பெறவில்லை. கடந்த அனுபவங்களை நெனச்சு தாழ்ந்து போகக்கூடாது. அதனால புதிய வழ்க்கையைப் பெற்று புதிய உத்வேகத்துடன் வாழுறதுக்குப் பழைய தேவையற்ற அனுபவங்களை மறக்கணும். புதிய எழுச்சியுடன் உயிர்ப்பாய் உயிர்த்துடிப்பாய் வாழ்ந்து புதிய இலக்குகளை வெற்றியுடன் அடையணும்" என்று கூறித் தைரிய மூட்டினார்.

# இயேசுவின் பாடுகள் : வலிகளிலிருந்து வலிமைக்கு

பணி. **போசு**

**"துன்பங்களைத் தாங்கிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம் ஏனெனில் துன்பத்தால் மனவுறுதியும், மனவுறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம்" (உரோ 5: 3-4)**

வாழ்வின் தொடக்கம் முதலே துன்பங்களுடனே இயேசு பயணிக்கிறார். குழந்தையாக இருந்தபோது ஏரோது அவரைக் கொல்லத் தேடுகிறான். நாசரேத்து செபக்கூடத்தில் மறையுரையாற்றி முடித்தபோது, மலை உச்சியிலிருந்து அவரைத் தள்ளிவிட முயற்சிக்கின்றனர். யூதர்கள் இயேசுவின் மீது ஏறிய கற்களை எடுக்கின்றனர். பரிசேய, சதுசேயர் ஏரோதியரோடு சேர்ந்து இயேசுவைக் கொல்லத் திட்டம் தீட்டுகின்றனர்; சீடருள் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுக்கிறார்; இன்னொருவர் மறுதலிக்கிறார்; இயேசுவின் வல்ல செயல்களால் பெற்று வாழ்வடைதே மக்கள் அவரைச் சிலுவையில் அறையும் என கூக்குரலிடுகின்றர்; படைவீரர்கள் அவரை ஏளனம் செய்து, உடலைச் சிதைத்துக் கொலை செய்கின்றனர். ஆனால் இத்துன்பங்கள் எல்லாம் இயேசுவை உடைத்துவிடல்லை. மாறாக, இயேசுவுக்கு மனஉறுதியையும், தகைமையையும் எதிர்நோக்கையுமே அளித்தன என்பதுவே நமது செய்தி.

### 1. துன்பத்தால் இயேசு மனவுறுதி பெறுகிறார்

நாசரேத்து நகரில் மலை உச்சியிலிருந்து தள்ளிவிட முயற்சிக்கும்போது இயேசு அவர்களைவிட்டு விலகி, பின்வாங்கி அஞ்சி ஓடவில்லை. மாறாக அவர்கள் நடுவே நடந்து செல்கிறார். பரிசேய, சதுசேயர்கள் கொல்லத் தேடுவதை அறிந்தும் கோயிலில் வெளிப்படையாகப் போதிக்கிறார். கைது செய்யப்படுவோம் என அறிந்தும் ஒலிவக்கிளைகள் ஏந்திய மக்கள் புடைக்சூழ எருசலேம் நகரில் நுழைகிறார். சிலுவையின் பாதையில் மூன்று முறை விழுந்தும் எழுகிறார். ஒவ்வொரு வலியும் இயேசுவுக்குப் படிப்படியாக வலுவூட்டவே செய்தது. மே, 08, 2016 தி எக்கனாமிக் டைம்ஸ், பத்திரிகைச் செய்தியிது. மகாராட்டிர மாநிலத்தின் வசீம் மாவட்டத்திலுள்ள, கொலம்பேசுவர் கிராமத்தைச் சேர்ந்த பாபுராவ் தஜ்னேயின் மனைவி குடிநீர் கொணடுவர பக்கத்து ஊருக்குச் செல்கிறார். அங்குள்ள ஆதிக்கச் சாதியினர் அப்பெண்ணை ஏளனம் செய்து, தண்ணீர் தர மறுத்து, துரத்தி விடுகின்றனர். தஜ்னே வருத்தமுறுகிறார். வருத்தம் உறுதிப்பாடாக மாறுகிறது. 40 நாட்களில் தாமாகவே ஒரு கிணறு வெட்டி, தமது குடும்பத்திற்கு மட்டுமன்றி, தன் கிராமத்திற்கே குடிநீர் வழங்குகிறார்.

### 2. துன்பம் இயேசுவுக்குத் தகைமை தருகிறது

தகைமை என்பது எளிதில் பொருள் விளங்காது. ஆனால், அழகான சொல். பண்பட்ட நிலை அல்ல, முதிர்ச்சியான நிலை எனப் பொருள் கொள்ளலாம். துன்பங்கள் இயேசுவைப் பண்படுத்துகின்றன. யூதர்கள் தம்மேல் எறியக் கல்லெமுத்தனர் என்பதைச் சீடர்கள் எடுத்துக்கூடத் பெத்தானியாவுக்கு இறந்த இலாசரைப் பார்க்கச் செல்ல வேண்டாம் எனத் தடுத்தப் பிறகும் இயேசு செல்கிறார். கல்வாரிப் பாதையில் தம் வலியைப் பொருட்படுத்தாமல் எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார். வலியின் வருத்தத்தின் உச்சத்தில், சிலுவையிலிருந்தே தம் பகைவர்களை மன்னிக்கிறார். துன்பங்கள் இயேசுவைப் பண்படுத்துகின்றன. அதன் மூலம் பிறர் துன்பத்தை உணரும் வலிமையை இயேசு பெறுகிறார்.

என் நண்பர் குடும்பமொன்று இத்தாலியைச் சேர்ந்தவர்கள். பத்து ஆண்டுகளுக்கு முன் மூத்த மகனைப் புற்றுநோய்க்குக் கொடுத்துவிடுகின்றனர். பயங்கர துயரம், அழுகை, அழுத்தம், ஏமாற்றம் எல்லாம். அப்போது முடிவு செய்கின்றனர். பிறர் புற்றுநோயால் வருந்தாமலிருக்க ஏதாவது செய்ய வேண்டுமென்று இந்நாள்வரை, தங்கள் மொத்த வருவாயையும் புற்றுநோய் ஆராய்ச்சிக்கெனக் கொடுத்துவிடுகின்றனர்.

### 3. துன்பம் எதிர்நோக்கைத் தருகின்றது

"Spes Non Confundit" எதிர்நோக்கு ஏமாற்றமளிப்பதில்லை எனும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஏடு எதிர்நோக்கை இப்படி விளக்குகிறது. **"எதிர்காலத்தில் நிகழவிருக்கிற நற்செயல் குறித்த உறுதிப்பாடு"**. இயேசுவிடம் இந்த உறுதிப்பாடு இருந்தது. தம் இறந்தாலும் தமக்குப் பின் தம் பணி தொடரும், இறையாட்சி மலரும் எனும் உறுதிப்பாடு. எனவேதான், அதற்கு ஆயத்தம் செய்யும் விதமாகச் சிலுவையடியில் நின்ற தம் தாயை அன்புச் சீடரின் பொறுப்பிலும் அன்புச் சீடரை மரியன்னையின் பொறுப்பிலும் ஒப்படைக்கிறார். சிலுவை ஒன்றின் முடிவு அல்ல இணைந்து செல்லவேண்டிய நீண்ட பயணத்தின் தொடக்கம் என உணர்த்துகிறார்.

தஸ்ரத் மாஞ்சியைத் தன் மனைவியின் மரணம் வருந்துகிறது. பீகார் மாநிலம், கயா பகுதிக்கு அருகில் வசிப்பவர். மருத்துவமனைக்கு அவரது மனைவியை உடனே கொண்டுபோக முடியவில்லை. ஏனென்றால், அவரது ஊருக்கும் மருத்துவமனை அமைந்திருக்கிற நகருக்குமிடையே மிகப்பெரிய மலை இருந்தது. மனைவியின் இறப்பால் உடைந்து விடவில்லை, உறுதிப்படுகிறார். இந்த மலையை உடைத்தால் மட்டுமே நாளைய தலைமுறை வாழும் என நம்புகிறார். 1960 முதல் 1982 வரை 22 ஆண்டுகள், 360 அடி நீளத்திற்கு மலையைக் குடைந்து வழி உண்டாக்குகிறார். 55 கி.மீ தூரத்தை 15 கி.மீ ஆகக் குறைக்கிறார். துன்பம் எதிர்நோக்கத்தைத் தர முடியும். வலிகளால் உடைந்தும் போகலாம். உருப்பெறவும் செய்யலாம். இயேசு உருப்பெற்றவர், வலிமை பெற்றவர், வாழ்வு தந்தவர்.

**இறைவார்த்தைகள் : 2தெச 1:4; யாக்கோபு 1:3-4,12**

# வாழ்க்கை பயணமாக... புனிதமாக...


அருள்சகோ. **சோபியா** FST நட்டாலம்.

**பயணம் ஒன்றாய்ப் போகின்றோம், பாதை முழுதும் கீதங்கள் ...................**

பயணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் இப்பாடல்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. இவ்வுலகில் எத்தனை எத்தனையோ பயணங்கள் உள்ளன. வாழ்க்கையும் ஒரு பயணம்தானே. தமது பிறப்பில் தொடங்கி இறப்பில் முடியும் ஒரு பயணம். இப்பயணத்தில் தான் எத்தனை விதமான அனுபவங்கள், இன்பங்கள், துன்பங்கள், சோகங்கள், ஏமாற்றங்கள், எதிர்பார்ப்புகள், வெற்றிகள், தோல்விகள், பிறப்புகள், இறப்புகள் என அடுக்கிக் கொண்டே போகணும்.

**வாழ்க்கைப் பயணம்**

நம் பயணம் எப்படி நடைபெறுகிறது? வாழ்க்கைப் பயணம் பயனுள்ளதாக இருக்கிறதா? இது நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் நமக்குள் எழுப்ப வேண்டிய கேள்வி. இவ்வுலகில் வாழ்ந்து மறைந்த பல நல்ல தலைவர்களின் வாழ்வு நமக்கு ஒரு பாடமாக உள்ளது. புனித அன்னை தெரேசாவின் வாழ்க்கைப் பயணம், அழைத்த கடவுளுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதும், ஏழைகள் மற்றும் வறியவர்களுக்கு இரக்கம் காட்டும் தூதுவராக இருப்பதுமே. நம் புனிதர் தேவசகாயத்தின் பயணமோ இயேசுவுக்காகத் தன்னுயிரை இழக்கும் பயணம்.



சவால்களைச் சந்திப்பதற்கு நாம் திறந்த மனதுடன் இருந்தால், கடுமையாக உழைக்கத் தயாராக இருந்தால், சிறப்பான மாற்றங்களை வரவேற்பதற்குத் தயாராக இருந்தால், நம் வாழ்வின் பாதையில் ஒவ்வொரு படியிலும் வெற்றியை எதிர் கொள்ளலாம். பயணத்தை வெற்றியோடு, மகிழ்ச்சியாகத் தொடரலாம்.

வாழ்க்கை என்பது தோல்விகளே இல்லாமல் போவது என்பதல்ல, முடிவான குறிக்கோளை அடைவதே. அன்பில் நம்பிக்கை வையுங்கள். தேடினாலும் கிடைக்காதது அன்புதான். அன்பை உங்கள் வாழ்விலிருந்து வெளியேற்றி விடாதீர்கள். அன்பைப் பெற்றுக்கொள்ள எளிதான வழி, அதனை மற்றவர்களுக்கு நீங்கள் அள்ளி வழங்குவதுதான். உங்கள் கனவில் நம்பிக்கை வையுங்கள். எதார்த்தமான, எதற்கும் பயனற்றவை என உங்கள் கனவுகளை ஒதுக்கி வைத்துவிடாதீர்கள். கனவுகள் இல்லாதிருப்பது, நம்பிக்கை இல்லாதிருப்பதே. நம்பிக்கை இல்லாதிருப்பது, குறிக்கோள் இல்லாதிருப்பதே. நீங்கள் எங்கே இருந்து கொண்டிருக்கிறீர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்? என்று மறந்து போகிற அளவுக்கு வாழ்வில் அதிவேகமாக ஓடாதீர்கள். வாழ்க்கை என்பது

பந்தயமல்ல. பயணம். அதன் ஒவ்வொரு அடியையும் சுவைத்துப் பயணிக்க. புன்னகை பூத்தவாறு இருங்கள். உங்கள் மூலமாகக் கதிரவன் ஒளி வீசட்டும்.

**எதுவும் நிலையில்லை**

எப்போதுமே வாழ்க்கை பயணத்தோடு ஒப்பிடப்படுகிறது. ஏனெனில் எதற்கும் ஒரு முடிவு உண்டு. வாழ்க்கைக்கும் ஒரு முடிவு உண்டு, எல்லை உண்டு.



மேகங்களைப் பார்த்திருப்பீர்கள். அவை ஓரிடத்தில் நிலையாக நிற்பதில்லை. மரங்கள் பூக்கின்றன. இளந்தளிர் விடுகின்றன. பின்பு இலைகள் உலர்ந்து உதிர்ந்து விடுகின்றன. அலைகள் கரைநோக்கி வருகின்றன. பின் கடல் நோக்கி மீண்டும் திரும்பி விடுகின்றன. இரவு முடிந்தால் பகல் தொடருகிறது. பகலுக்குப் பின் இரவு வந்து விடுகிறது. வாழ்க்கைப் பயணமும் ஒரு சுழல் வட்டம்தான். மாறிக் கொண்டே இருக்கிறது. இருப்பினும் மாற்றம் மாறாமலும் இருக்கிறது. நாம் எல்லோரும் அதன் பகுதிகள்தான். நாம் பேருந்திலோ, இரயிலிலோ பயணம் செய்கையில் நமக்கான இடம் வந்தவுடன் இறங்கி விடுகிறோம். நம்மோடு வந்த மற்றவர்கள் பயணத்தைத் தொடர்கிறார்கள். ஏனெனில் அவர்கள் இறங்க வேண்டிய இடம் இன்னும் வரவில்லை. இதே போல்தான் நமது வாழ்க்கைப் பயணமும். இந்த உலகில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருப்போம். அதுவும் நமக்கெனக் குறிக்கப்பட்ட காலம் வரையில்தான். மற்றவர்கள் ஒருநாள் நம்மை மதிப்புடன் நினைவு கூர்வதற்கு நாம் இவ்வுலகில் என்ன விட்டுச் செல்கிறோம்? நமது வாழ்க்கை முத்திரையை இட்டுச் செல்வதற்காக நமக்கென குறிப்பிட்ட காலம்தான் உள்ளது. எனவே நாம் நமது ஒவ்வொரு கணப்பொழுதையும் புதையலாகப் போற்றுவோமாக!

நமக்கான பாதையை அமைத்துக் கொள்ள நம்முள் திடமான உறுதி வேண்டும். விடாமுயற்சி வேண்டும். விடாப்பிடி வேண்டும். வாழ்க்கை நெடுகிலும் கடுமையாக உழைப்பதற்கு வேகத்தை அதிகரிக்க வேண்டும். உயர்வின் உச்சிக்கு இட்டு செல்கிற சாலை கரடு முரடானது.

**பயணம் புனிதமே**

இந்த வாழ்க்கைப் பயணத்திலே நாம் அவருள் (கடவுள்) வாழ்கிறோம். இயங்குகிறோம்.



இருக்கிறோம். மகிழ்ச்சியான தருணங்களில் கடவுளைப் புகழ்க! வாழ்வின் இன்னல் மிகும் கணங்களில் கடவுளைத் தேடுக! அமைதி நிலவும் வேளைகளில் கடவுளைத் தொழுக! துயரமான பொழுதுகளில் கடவுளை நம்புக! ஒவ்வொரு கணமும் கடவுளுக்கு நன்றி நவிலுக! பயணம் புனிதமாவதாக!

# இயற்கையின் பாதையில் பாரினை காப்போம்

Dr. ஏஞ்சலின் ஆஷா BNYS

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**

- மிகுந்த பசி, நீங்காத நோய், வெளியில் இருந்து வந்து தாக்கும் பகை ஆகிய இவை அனைத்தும் இல்லாமல் இருப்பதே ஒரு சிறந்த நாடு ஆகும்.

நீங்காத நோய்களையும் நீக்கி உலக நாடுகளின் ஆரோக்கியத்தை மேன்படுத்துவதில் உலக சுகாதார அமைப்பு முனைப்புக் காட்டுகின்றது. உலக சுகாதார தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7-ஆம் தேதி கொண்டாடப் படுகின்றது. இது 1948-ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பு (WHO) நிறுவப்பட்டதைக் குறிக்கின்றது. இதில் உலகம் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சனைகள் குறித்ததான விழிப்புணர்வு, அவற்றை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் எடுக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் "**ஆரோக்கியமான தொடக்கம், நம்பிக்கையை ஏற்படுத்தும் எதிர்காலம்**" என்ற கருப்பொருள் மையப்படுத்தி அனுசரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தாய் சேய் ஆரோக்கியத்தை மேன்படுத்துவதற்கான திட்டங்கள் விழிப்புணர்வுகள் முன்னேடுக்கப்படுகின்றது.

ஓர் நாட்டின் சுகாதாரம் அதன் சமூக நல்வாழ்வை சார்ந்து, அது தனி மனித ஆரோக்கியத்தை அடிப்படையாக கொண்டே அமைகின்றது. நாம் வாழும் இந்த நவீன கால சூழலில் மனிதன் அவசர வாழ்க்கை பின் ஓடுகின்றன நான் வேகமாக அனைத்தையும் அடைய வேண்டும் என்ற எண்ணம மேல்லோங்கி நிற்கின்றது. எனவே, தவறான உணவுமுறை பழக்க வழக்கம், வாழ்வியல் முறையில் சிக்கி வாழ்வியல் மாற்றத்தால் ஏற்படும் நோய்களான உடல்பருமன், உயர் இரத்த அழுத்தம், அதிக கொலஸ்ரால் ((Hish Cholestrol) தைராஸ்டு, சர்க்கரை நோய், இதய கோளாறு, கேன்சர் போன்ற நோய்களில் சிக்கி தவிக்கின்றார்கள். எதிர்மறை எண்ணம், தூக்கமின்மை போன்ற மனக்கவலை (depression) போன்ற மன நோய்களும் விட்டு வைக்கவில்லை.

ஓர் முழு மனித ஆரோக்கியம் என்பது உடல், உள்ளம் மற்றும் எண்ண ஓட்டம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ஓர் முழு மனித ஆரோக்கியத்தை இரத்த பரிசோதனை எண்களோ அல்லது உடல் கூறுப்படங்களோ மட்டும் நிர்ணயிக்க முடியாது. மனித உறுப்பின் செயல்பாட்டை விவரிக்க அல்லது அதில் ஏற்படும். அற்புதமான மாற்றங்களை ஓர் குறிப்பிட்ட வரையறையில் நிறுத்த முடியாது. மனித உடல் தன்னை தானே சரிசெய்து கொள்ளும் ஆற்றல் கொண்ட இயற்கையின் அற்புத படைப்பு, நம் உடலில் உள்ள தோல், தசை, இரத்த நாளம், எலும்பு அல்லது உள் உறுப்புகளில் பாதிப்புகள் வரும் போது அது தன்னைத்தான் சரிச்செய்து (Self Healing Process) உறுதிப்படுத்தியும் (Restreng thening / remodeling) கொள்கின்றது.

நாம் எடுத்துக்கொள்ளும் உணவு முறை, உடற்பயிற்சி, உடகொள்ளும் தண்ணீர், யோக பயிற்சிகள், இயற்கை வாழ்வியல் முறை, மூச்சு பயிற்சி போன்றவை நம் உடல் செல்களின் ஆரோக்கியமான சரிச்செய்தல் மற்றும் உறுதிப்படுத்தலும் முக்கிய பங்கு ஆற்றுகின்றது. இயற்கை மற்றும் யோகாவில் நீர் சிகிட்சை, மண் சிகிட்சை, காந்த சிகிட்சை, உபவாசம் (Fasting) மற்றும் இயற்கை உணவு சிகிட்சை, மசாஜ் மற்றும் நறுமண சிகிட்சை, நிற சிகிச்சை அக்குபஞ்சர் சிகிச்சை, இயன் முறை சிகிச்சை, யோக பயிற்சிகள், மூலிகை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றது.

இம்முறை சிகிட்சைகள் பக்க விளைவுகள் ஏதும் இல்லாமல் குறைந்த செலவில் இயற்கை அம்சங்களை பயன்படுத்தி நம் உடலை சுத்தமாக்கி, நம்முடலில் உள்ள கழிவுகளை அகற்றுகின்றது. அதன் மூலம் நம்முடலின் நோய் எதிர்ப்பு சக்தியை (Immunity Power) அதிகப்படுத்தி, உடலின் செயல் திறனையும், அதன் சரிச்செய்து கொள்ளும் ஆற்றலையும் (Self Healing) அதிகப் படுத்துகின்றது.

இம்முறை சிகிட்சைகள் இயற்கை மற்றும் யோகா மருத்துவமுறையில் வாழ்வியல் முறை நோய்களில் (Life Style Diseases) இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள உதவுகின்றது.

எனவே, நம் ஆரோக்கியத்தை பக்கவிளைவுகள் இன்றி குறைந்த செலவில் இயற்கையின் வழியில் இயற்கை மற்றும் யோகாவை பயன்படுத்தி பேணுவோம்!

**நம் தேச ஆரோக்கியத்தை காப்போம்!**
**முழு உலக நலம் பெறுவோம்!**

# உயிர்ப்பாய் உயிர்த்துடிப்பாய்

அருள்நிதி. **S.M. செபஸ்டியான்**
நம்வாழ்வு பொன்விழா விருதுபெற்றவர்

அன்பு தோழா நீ உயிர்ப்பாய்!
ஆற்றல் கொண்டிரு உயர்துடிப்பாய்!
பண்புத் தெளிவாய் நீ உயிர்ப்பாய்!
பகுத்து அறிவாய் உயர்துடிப்பாய்!

மானுட பாவம் போக்கிடவே
மலர்ந்த இயேசுவாய் நீ உயிர்ப்பாய்!
நானில மாந்தரின் மீட்புக்கு
நன்னயம் கொண்டிடு உயர்துடிப்பாய்!

அயலார் விரும்பும் விதத்தினிலே
அறவழி என்றும் நீ உயிர்ப்பாய்!
பயமோ, பாவ அழுக்குகளோ
படரா திருப்பாய் உயர்துடிப்பாய்!

அகிலம் சூழ்ந்து தீமையிலா
அறிவின் வழியில் நீ உயிர்ப்பாய்!
மகிழும் மனநிலை கொண்டிடவே
மாண்புற உழைப்பாய் உயர்துடிப்பாய்!

சமூக அமைதி சங்கமிக்க
சரித்திர மாகி நீ உயிர்ப்பாய்!
அமைதி சூழ்ந்த உலகமைய,
அனுதினம் எண்ணிடு உயர்துடிப்பாய்!

எல்லா மக்களும் நன்குவாழ
எழுச்சி யுடனே நீ உயிர்ப்பாய்!
வல்லச் செயல்கள் புரிந்துநிதம்
வாழ முற்படு உயர்துடிப்பாய்!

எண்ணம் இனியச் சொல்லாக
என்றும் மாறி நீ உயிர்ப்பாய்!
திண்ணம் கொண்ட உள்ளத்துடன்
தினமும் செயல்படு உயர்துடிப்பாய்!

நல்ல செயலைக் கைக்கொண்டு
நன்கு உழைத்து நீ உயிர்ப்பாய்!
அல்ல லின்றி அன்றாடம்
அகமகிழ் வாலே உயர்துடிப்பாய்!

கிடைத்த வாழ்வை வளமாக்க
கடமை உணர்ந்து நீ உயிர்ப்பாய்!
துடைத்து எறிய அநீதரை
துணிந்து நிற்பாய் உயர்துடிப்பாய்!

திருஅவை சொல்லும் நெறிமுறையில்
திடமாய் நின்று நீ உயிர்ப்பாய்!
அருந்தமிழ் மொழியைக் காத்திடவே
அழகுற பயணி உயர்துடிப்பாய்!

இறையின் ஆட்சி இப்புவியில்
இரண்டற கலக்க நீ உயிர்ப்பாய்!
இறையின் வழியில் பயணிக்க
இன்றே தொடங்கு உயர்துடிப்பாய்!



# உயிர்ப்பு நமதாக...

## எதிர்பார்ப்பு குறையட்டும்; எதிர்நோக்கு ஆழப்படட்டும்

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

"**எதிர்காலம் பயமுறுத்துகிறதா**?" என்கிற கேள்வியை முன்வைத்து 16 - 25 வயதுடைய 10000 வளரிளம் பருவத்தினரிடம் உலகளாவிய ஆய்வொன்று சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, உலகளவில் 75% பேரும், அதிகளவாக பிரேசிலில் 86% பேரும், குறைந்தளவாக பின்லாந்தில் 56% பேரும் எதிர்காலம் குறித்துப் பயம் கொண்டுள்ளனர். இதில் இந்தியாவின் பங்கு 80%. உலகை அதன் உண்மைத் தன்மையைவிட மிகவும் ஆபத்தானதாக உணரும் விதமாய் ஊடகங்கள் தொடர்ந்து மக்களை அச்சுறுத்தும் வன்முறைச் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருப்பதுதான் இதற்கு முதன்மைக் காரணம் என்கின்றனர். இதனை "Mean World Syndrome" என்கிறோம். இத்தகு ஒரு கருதுகோள் அடிப்படையிலான அறிவாற்றல் சார்பு (cognitive bias) என்பது இன்று மக்களின் அணுகுமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் உலகம் பற்றிய கருத்துக்களை நேரடியாகப் பாதிக்கின்றன. எனவே, எதிர்காலம் குறித்த பயம் என்பது கற்பனைவாதம் அல்ல; கரிசனைக்குரிய காரியம். எதை உள்வாங்குகின்றோமோ, அதுவாகவே மாறி விடுகிறோம். நமது உள்ளீடுகள் நலமிகு நன்மைகளை விதைப்பதாய் அமைய வேண்டும். உயிர்ப்புப் பெருவிழாவும் "**எதிர்நோக்கு**" என்கிற நம்பிக்கையை நமக்குள் விதைத்திடவே ஆண்டுதோறும் வருகின்றது.

**எதிர்பார்ப்பும் எதிர்நோக்கும்**

இன்று எதிர்பார்ப்புகள் நம்மிடையே அதிகம். ஒரு வளமான எதிர்காலத்திற்காகக் காத்திருப்பதுதான் எதிர்பார்ப்பு. இது உப்பளவு தேவைதான். எதிர்பார்ப்புகள் நிறைவேறாத தருணங்கள் ஏமாற்றங்களை, விரக்திகளை, வருத்தங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால், எதிர்நோக்கு எப்பொழுதும் புதிய தொடக்கத்தை, புதுவருகையை நம்மில் உருவாக்குகிறது. இது கடலளவு தேவை. எதிர்நோக்கு என்பது ஒருபோதும் வளமான வாழ்வை வாக்களிக்கும் எதிர்காலத்திற்கான ஏக்கமல்ல. இந்தத் தெளிவும் நமக்கு அவசியம். உண்மையான எதிர்நோக்கு நிலைவாழ்விற்கான வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டு, நிகழ்காலத்தை அர்த்தமுள்ள விதத்தில் வாழ்வதை, வரவேற்கிறது. எனவே, எதிர்நோக்கு வற்றாத நீரூற்றாய் நம்மில் பெருக்கெடுத்து ஓடத் தேவைப்படும் உயிர்ப்பின் சாட்சியங்களை அசை போட்டுப் பார்ப்போம்!

புனித வெள்ளியின் கண்ணீர் இன்னும் உலரவில்லை; பெரிய கல் இயேசுவின் விதியை முத்திரை குத்தியுள்ளது. இருளையும் சிலுவையின் நிழலையும் ஏந்திய அப்பெண்கள் அதிகாலையில் கல்லறைக்குச் செல்கிறார்கள். அவர்களின் கேள்வியெல்லாம், "**கல்லறை வாயிலிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்**?" அந்தக் கல் இயேசுவின் கதையின் முடிவைக் குறித்தது. உலகிற்கு வாழ்வாக வந்தவர் கொல்லப்பட்டார். தந்தைக் கடவுளின் அன்பை அறிவித்தவர் சிலுவையில் அறையப்பட்டார். அடையாளம் தெரியாத ஒரு பெண்ணைக் கல்லெறியும் கொடுமையிலிருந்து விடுவித்த மன்னிப்பின் இளவரசர், இப்போது ஒரு பெரிய கல்லின் பின்னால் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்தக் கல்லை ஒரு பெரிய தடையாகப் பெண்கள் தங்கள் இதயங்களில் உணர்கின்றனர்.

இருப்பினும்...அச்சமிருந்தாலும் அவநம்பிக்கையால் பின்வாங்கவில்லை; பயம் எழுந்தாலும் முயற்சிக்கத் தவறவில்லை. நிச்சயம் ஏதோவொன்று நிகழும் என்று எதிர்நோக்குகிறார்கள். விளைவு, "**அவர்கள் நிமிர்ந்து உற்றுநோக்கிய பொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள்**" (மாற்கு 16:3). யோசனைக்கு அப்பால் உயிர்ப்பின் அற்புதம் கண்டு திகைக்கிறார்கள். கவலையில் எழுந்த கேள்வியானது நம்பிக்கை மகிழ்வாய் உயிர்ப்பு பெறுகிறது. நாமும் இயேசுவோடு இணைந்து உயிர்ப்படைய எதிர்பார்ப்பின் கற்களைப் புரட்டுவதும், எதிர்நோக்கின் இதயங்களைத் திறப்பதும் தேவை.

**புரட்ட வேண்டிய அந்தக் கல் எது? எப்படி?**

நம் வாழ்விலும் பல தருணங்களில் நம் இதயக் கதவை ஏதாவது ஒரு பெரிய கல் தொடர்ந்து தடுப்பதை உணர்கிறோம். சில உதாரணங்கள் இதோ : மரணம் ஏற்படுத்தும் வெறுமையின் துயரத் தருணங்கள், நன்மையைச் செய்வதில் இருந்து நம்மைத் தடுக்கும் தோல்வி பயங்கள், நேர்மையான அன்பின் உந்துதல்களை சுயநலமாக்கும் அனைத்துவிதமான வடிவங்கள், கொடூரமான வெறுப்பு மற்றும் போரின் மிருகத்தனத்தால் சிதறடிக்கப்பட்ட அமைதி...என வாழ்வியலின் அன்றாட தருணங்கள் முதல் அசாதாரண சூழல்கள்வரை நாம் பலவிதமான தடைக்கற்களைச் சந்திக்கிறோம், இத்தருணங்களில் நாமும் கேட்கிறோம் "கல்லறையில் இருந்து கல்லை யார் உருட்டுவார்?" எதிர்பார்ப்புகளைக் கொண்டு, உலக சாதனைகளால், தொழில்நுட்ப சக்திகளால் மட்டும் இந்தக் கற்களை அகற்ற நாம் முயற்சி செய்கிறோம். இது தோல்விக்கும் விரக்திக்கும் மட்டுமே நிச்சயம் வழிவகுக்கும்.

ஆனால் இருளைத் தங்கள் இதயங்களில் சுமந்த அதே பெண்கள் மேலே பார்த்தபோது, மிகப் பெரிய அந்தக் கல் ஏற்கனவே உருட்டப்பட்டிருந்தது. இதுவே கிறிஸ்துவின் பாஸ்கா, கடவுளின் சக்தியின் வெளிப்பாடு: மரணத்தின் மீது வாழ்வின் வெற்றி, இருளின் மீது ஒளியின் வெற்றி, தோல்வியின் இடிபாடுகளில் நம்பிக்கையின் மீள்பிறப்பு. அந்தக் கல்லை என்றென்றும் உருட்டியவர், அகற்றுபவர் நம் கடவுள். முடியாதவற்றையும் முடித்து வைக்கும் கடவுள். "**கிறிஸ்துவின் உயிர்ப்பு பிரச்சனைகளை மறைந்துபோகச் செய்யும் மாயவித்தை அல்ல. மாறாக, தீமையின் ஆணிவேரின் மீது கொண்ட அன்பின் வெற்றி. இவ்வெற்றி தீமையை நன்மையாக மாற்றும். இதுவே கடவுளின் வல்லமையின் தனித்துவமிக்க முத்திரையாகும். உயிர்த்த ஆண்டவர், சிலுவையில் அறையப்பட்டவர் மட்டுமல்ல, அவர் தம் மகிமைமிகு உடலில், அழிக்கமுடியாத காயங்களைத் தாங்கியுள்ளார். இந்தக் காயங்கள், நம்பிக்கையின் ஜன்னல்களாக மாறியுள்ளன. நம் பார்வையை அவர் பக்கம் திருப்புவோம். அவர், கடுமையாய்த் தாக்கப்பட்டுள்ள மனித சமுதாயத்தின் காயங்களைக் குணப்படுத்துவார்**" (திருத்தந்தை பிரான்சிஸ்).

**உயிர்ப்பில் ஆழப்படும் எதிர்நோக்கு**

வாழ்வின் கடவுளான இயேசுவை அன்றாட வாழ்வில் வரவேற்போம், நாமும் அவரை நோக்கி மேலே பார்ப்போம். இன்று மீண்டும் அவருக்கு "**ஆம்**" என்று சொல்லுவோம். அப்படியானால், எந்தக் கல்லும் நம் இதயங்களுக்கு வழியைத் தடுக்காது. எந்தக் கல்லறையும் வாழ்வின் மகிழ்ச்சியை அடக்காது. எந்தத் தோல்வியும் நம்மை நிராசைக்கு ஆளாக்காது. செயற்கை நுண்ணறிவின் சக்திக்குள் அடங்கிப் போய்விடாமல், சாதனை சாதனை என்று வேகம் கொண்டு விடாமல், சாதாரண செயல்பாடுகளின் வழியாக நம்பிக்கையை வளர்த்தெடுப்போம். பெரிய பெரிய காரியங்களைச் செய்து விளம்பரப்படுத்தி சுயதிருப்தி அடைவதைவிட, சின்னஞ்சிறு நலமிகு வார்த்தைகள், புன்முறுவல்கள் வழியாக, சந்திக்கும் மனிதர்களிடம் நல்ல சமாரியனாய் நடந்து கொள்வோம். எளியவற்றின், சாதாரணவற்றின் வலிமையைத் தம் திருத்தூதுப் பணிகளில் கடைபிடிக்கும் நம் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவதுபோல், "**நமது காலடிகளின் திசையை மாற்றியமைக்கவும், நமது பிரச்சினைகளைத் தீர்க்கவும்... எப்போதும்... ஒரு வழியுண்டு என்பதனை நாம் கண்டுணரவும் எதிர்நோக்கு உதவுகிறது**" (புகழனைத்தும் உமதே, எண்.61). நம்பிக்கையை ஒருபோதும் கைவிடோம்!



# நற்கருணை - நினைவுகூர்தலும் கையளித்தலும்

அருள்பணி. **வ. இரபேல்**

நற்கருணை என்பது ஒரு திருவழிப்பாட்டு நிகழ்வு ஆகும். இது அருளடையாள முறையில் உண்ணப்படும் திருவிருந்து ஆகும். இதில் திருஅவை இயேசுவின் தியாகமிகு வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை நினைவு கூர்ந்து, கொண்டாடி, அறிக்கையிடுகிறது.

தூய ஆவியாரால் ஒன்றுகூட்டப்பட்ட திருஅவை. கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்து வழியாகவும், அவரோடும், அவரிலும், எல்லா வல்ல தந்தையாகிய இறைவனுக்கு எல்லா மாட்சியும் பெருமையும் வழங்குகிறது.

அருளடையாளத் திருவிருந்தாகிய நற்கருணையில், சாதாரண அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாற்றம் பெறுகின்றன. அவை நம்பிக்கையின் அடிப்படையில் இறைமக்களால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

நற்கருனை என்பது இயேசுவின் முழு வாழ்வையும் நினைவுகூர்ந்து கொண்டாடுதலாகும். முக்கியமாக, அவருடைய வாழ்வின் உச்சமாகிய பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை நினைவுகூர்ந்து கொண்டாடுதலாகும்.

இது ஒரு கொண்டாட்டமும் ஆகும். அதில் கடவுள் வரலாறு முழுவதும் நிகழ்த்திய அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் நினைவுகூர்ந்து நாம் அவரைப் பாராட்டுவதோடு, அவருக்கு நன்றியும் செலுத்துகிறோம். முக்கியமான, இயேசு கிறிஸ்துவின் பணிக்காக இவ்வாறு செய்கிறோம். இறுதியாக, இது நம் ஆண்டவர் இயேசு தம்மையே கையளித்து, நமக்காகச் சாவை ஏற்றுக்கொண்டதை அவர் கால நிறைவில் மீண்டும் வரும் வரை அறிக்கையிடுதலாகும்.

**சொல்லாட்சி**

நற்கருணையைக் குறிப்பதற்கு 'யூக்கரிஸ்தியா' என்னும் கிரேக்கச்செல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் புதிய ஏற்பாட்டில் இச்சொல் பயன்படுத்தபடவில்லை. ஆனால், 'யூக்கரிஸ்தெயின்' என்னும் வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு நற்கருணையை எற்படுத்தியது குறித்த பகுதிகளில் இச்சொல் வருகிறது. இச்சொற்கள் நன்றி செல்லுத்துவதைச் சுட்டுவனவாகும். எபிரேயத்தில் 'பாராக்', 'முபராக்கா' ஆகிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை ஆசி கூறுவதைக் குறிக்கும் சொற்களாகும். அவை புதிய ஏற்பாட்டில் 'எயூலொஜியா' எனத் தரப்படுகின்றன. இயேசு முதன்முறையாக அப்பங்களைப் பலுக வைத்த நிகழ்வில், கடவுளைப் போற்றுவதாக 'எயூலொஜியா' பயன்படுத்தப்பட்டுள்ளது. (மத் 14:19). அதற்கு இணையான பகுதி யோவான் நற்செய்தியில் வருணிக்கப்படும்போது நன்றி செலுத்துவதாகச் சொல்லப்பட்டுள்ளது (யோவா 6:11,23). இரண்டாம் முறையாக அப்பங்களை இயேசு பெருகச் செய்தபோது, 'நன்றி கூறுவதாக' குறிப்பிடப்படுகிறது (மத் 15:36). அதே நிகழ்வு மாற்கு நற்செய்தியில் தரப்படும்போது 'நன்றி செலுத்தி' என்னும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் சிறு மீன்கள்மீது ஆசி கூறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (மாற் 8:6-7). இவ்வாறு, நன்றி கூறுதலும், ஆசி கூறுதலும் ஒன்றுக்கொன்று இணையானவையாகக் காட்டப்படுகின்றன.

வரலாற்றில் நன்றி கூறுதல் என்னும் பொருள்படும் 'யூக்கரிஸ்தியா' என்னும் செல்லே நற்கருணை என்பதற்குக் குறிப்பிடும் சொல்லாக நிலைத்துவிட்டது. அது இறைவன் செய்த வியத்தகு செயல்களுக்கு முக்கியமாக, கிறிஸ்து இயேசுவில் செய்த மீட்புச் செயலுக்கு நன்றி கூறுவது. ஆயினும், அச்செயல்களுக்காகக் புகழ் கூறுவதையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது.

நற்கருணை என்பதைச் சுட்டுவதற்கு 'ஹோ குறியாக்கோன் தெயிப்னோன்' என்னும் சொல்லே மிகப் பழமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது - (1 கொரி 11:20). ஆண்டவரின் திருவிருந்து என்பது இதன் பொருள். இச்சொல், உயிர்த்த ஆண்டவர் என்னும் முறையில் இயேசுவுடன் நற்கருணைக்கு உள்ள உறவைச் சுட்டிக் காட்டுகிறது. ஆண்டவரின் திருவிருந்தில் பங்கு கொள்வோர் அனைவருக்கும் ஆண்டவராம் இயேசுவில் எல்லாரிடமும் சென்று, அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நற்கருணைக்கு இன்னொரு சொல்லாட்சி, 'அப்பம் பிடுதல்' ஆகும். (லூக் 24:35, திப 2:42).

இது, நற்கருணை எவ்வாறு பகிர்ந்து கொள்ளும் நிகழ்வாக விளங்குகிறது என்பதைக் காட்டுகிறது. ஆண்டவரின் அப்பத்தை பிட்டு உண்போர், இயேசு எவ்வாறு தம் வாழ்வு முழுவதும், சிறப்பாகத் தம் பாடுகளில் தம்மையே பிறருக்காகக் கையளித்தாரோ, அதுபோல் தங்களைக் கையளிக்க வேண்டும்.

**நற்கருணை நிறுவப்படுதல்**

நான்கு இடங்களில், நற்கருணை நிறுவப்படுதல் சொல்லப்படுகிறது. அவற்றில் மாறுப்பட்ட இறையியல் கருத்துக்கள் உள்ளன. (1 கொரி 11: 23-25; மாற் 14:22-25; மத் 26:26-29; லூக் 22:19-20). ஆயினும் அடிப்படையான கூறுகள் அப்படியே உள்ளன. அவற்றைப் இப்பவுலடியார் மற்றும் லூக்கா மரபு சார்ந்தவை எனவும், மத்தேயு மற்றும் மாற்கு மரபு சார்ந்தவை எனவும் இருவகையாகப் பிரிக்கலாம்.

இவற்றில் இயேசு தாம் செய்ததைப் போலவே செய்யுமாறு, பங்கேற்பாளர்களுக்கு பணிக்கிறார். அதன்மூலம் அவரது நினைவு என்றென்றும் கொண்டாடப்படும். அவர்கள் அப்பத்தை எடுத்து, நன்றி கூறி, பிட்டு உண்ணுமாறு இயேசு பணிக்கிறார். அதன்மூலம், அவர்கள் இது உங்களுக்கான என் உடல் எனக் கூற இயலும். அதனால் அவர்கள் இயேசுவின் உடலில் தங்களை இணைத்து கொள்ள இயலும். தங்களில் இயேசு காணக்கூடியவராகவும் செயல்பட கூடியவராகவும் விளங்கிட வகை செய்திட இயலும். இவ்வாறு உள்ள உடனிருப்பு, அருளடையாளம் எனப் பின்னாளில் அழைக்கப்படும்.

அத்தகு சொற்கள் கிண்ணத்தை பொறுத்தவரைச் சொல்லப்படும். அது, இயேசுவின் இரத்ததால் ஆன, புதிய உடன்படிக்கை, அதிலிருந்து பருகும் போதெல்லாம் அவர் நினைவாக நாம் இவ்வாறு செய்கிறோம். இந்த உடன்படிக்கை சமூகத்தின் உறுப்பினர்கள் இயேசுவில் ஓருவருக்கொருவர் கொண்டுள்ள உறவைச் சுட்டுகிறது. இது புதிய உடன்படிக்கை. ஏனெனில் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பில் பங்குபெறுவதால் வரும் உள்ளார்ந்த மாற்றத்தைக் கொண்டுள்ளது. அந்த மாற்றம் 4 உலகளாவிய மாற்றம். அது நாடு, இனம், ஆண் பெண் போறுபாடு, சமூக நிலை ஆகிய அனைத்தையும் கடந்த உலகயாவிய மாற்றம்.

பவுலடியார் 1 கொரி 11:23-25 பகுதியில் நற்கருணை நிறுவப்பட்டதை எழுதுகையில் வரலாற்றில் நற்கருணை நிறுவப்பட்டதை விட, ஆழமாக இறையியல் கொண்ட வருணனையைத் தருகிறார். ''என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' என்னும் போது இறைமக்கள் சமூகத்தில் ஒருவரோடு ஒருவருக்கொருவர் உள்ள உறவு சொல்லப்படுகிறது. அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே உள்ள உறவும் சொல்லப்படுகிறது (1 கொரி 11: 23-25). அவர்கள் சிலைவழிபாடு முதலிய ஒழுக்கக்கேடான செயல்களை நீக்க வேண்டும் (1 கொரி 10: 1-13). இயேசுவின் நினைவாகக் கொண்டாடும் நற்கருணை நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஊடுருவி நம்மில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவல்லது எனப் பவுலடியார் உரைக்கிறார். நற்கருணைக்கும், கிறிஸ்தவ அறநெறிக்கும் இடையேயான உறவைப் பவுலடியார் எடுத்துக்கூறி நற்கருணை இறையியலுக்குத் தம் அரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.

இவ்வகையில் பவுலடியார், நினைவுகூர்தலையும், அறிக்கையிடுதலையும் நற்கருணையில் இணைத்துப் பேசுகிறார். ''என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' என்னும் சொற்கள் (1 கொரி 11:25). பவுலடியாரின் மரபில் உள்ளது என கூறலாம். ''நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம்'' என்னும் சொற்களும் அவர் மரபு சார்ந்தவையே எனக் கூறலாம்.

பவுலடியாரின் கருத்துப்படி, உண்மையான நற்கருணைக் கொண்டாட்டம் இயேசு தம்மையே உன்னதமான முறையில் கொடையாக வழங்கியது ஆகும். அது அருளடையாள முறையில் நற்கருணையில் வெளிப்படுத்தப்படுகிறது. இதனால், நற்கணையில் பங்கு பெறுவோர், ஆண்டவருடைய உடலை அதில் உயித்துணர வேண்டும் (1 கொரி 11 : 29). அவர்கள் எல்லா வேறுபாடுகளையும், பிளவுகளையும் புறந்தள்ள வேண்டும்.

இயேசுவை நினைவுகூர்ந்து கொண்டாடப்படும் ஆண்டவரின் திருவிருந்து, ஓர் அறிக்கையாகவும் இருக்கிறது எனப் பவுலடியார் உரைக்கிறார்.

''நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்'' என்கிறார் அவர். நினைவுபுரிதல் என்னும் முறையில் நற்கருணை என்பது நடந்தேறிய கடந்த கால நிகழ்வை நிகழ்காலத்திற்குக் கொண்டுவருகிறது. அறிவித்தல் என்னும் முறையில், அது இனி நிகழவிருக்கிற எதிர்கால நிகழ்வு ஒன்றை அறிவித்து, அதைத் தொடங்கி வைக்கிறது. உயிர்த்த ஆண்டவர் தன்னில் இனி இறப்பதில்லை; ஏனெனில் கடவுளுடன் என்றென்றும் முடிவின்றி வாழ்கிறார். ஆனால் அவர், நற்கருணையைக் கொண்டாடுவோரில் இறக்கிறார்; ஏனெனில் அவர்கள் ஆண்டவர் செய்ததைப் போலவே தங்கள் வாழ்வைக் கையளிக்கிறார்கள். இயேசு நற்கருணையை ஏற்படுத்திய இரவில் கையளிக்கப்பட்டதைப்போல இது உள்ளது.

இவ்வாறு நற்கருணை இயேசுவின் பாடுகளை நிகழ்காலத்திற்குக் கொண்டுவருகிறது.



# அம்பேத்கர் விரும்பிய இந்தியா

அருள்பணி M.C. ராஜன்

20-ம் நூற்றாண்டு உருவாக்கிய மாபெரும் மேதைகளில் ஒருவர் டாக்டர் அம்பேத்கர் என்றால் மிகையாகாது. இந்த நாட்டில் அவரை நாம் ஒரு சுதந்திரப் போராட்ட வீரராக, ஒடுக்கப்பட்டோரின் இதயத்துடிப்பாக, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளுக்காய்த் தன்னையே கையளித்த சமூகப் போராளியாகப் பார்க்கிறோம். அவரை வர்ணிக்க வேண்டும் என்றால் அவர் ஓர் அறிவுமேதை, சிறந்த பத்திரிகையாளர், மாபெரும் கல்வியாளர், சட்டமாமேதை, சமூகசீர்திருத்தவாதி, அரசியல் தலைவர் எனப் பல்வேறு அடைமொழிகளால் நாம் கொண்டாடலாம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த தலைசிறந்த சிற்பி. இந்தியக் குடியரசு உயிரோடு இருக்கும் வரையில் அம்பேத்கர் அவரது அயராத, அர்ப்பணம் நிறைந்த பணிக்காக நினைவு கூறப்படுவார் என்பது உண்மை.



அவரது வாழ்வு துணிச்சலும் நம்பிக்கையும் நிறைந்தது. ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தில் தீண்டாமைக் கொடுமையின் வலியை அனுபவித்து வளர்ந்த அவர், இந்தியத் திருநாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பியாக மாறியது காலத்தின் கருணை என்றே சொல்ல வேண்டும். அவரது ஆராய்ச்சிக் கட்டுரையின் விளைவுதான் இன்றைய திட்டக் கமிஷன். அவர் எழுதிய, "**ரூபாய் – இதன் பிரச்சனைகளும் தீர்வுகளும்**" என்ற புத்தகம்தான் இந்திய ரிசர்வ் வங்கி தொடங்குவதற்குக் காரணமாக அமைந்தது என்பது பல பேருக்குத் தெரியாது. அவ்வளவு பெரிய பொருளாதார மேதை. அவர் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது தான் 1942-ல் உழைக்கும் நேரம் 12 மணி நேரத்தில் இருந்து 8 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக அவரது சுதந்திர இந்தியா பற்றிய கனவு அவரது மாபெரும் படைப்பாகிய இந்திய அரசியலமைப்பு சாசனத்தில் விரிந்தது என்றால் மிகையல்ல. அவரது பெரும் கனவும், உழைப்பும் இந்தியா மூன்று தளங்களில் மாற்றம் பெற விரும்பினார். அவை சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றம் ஆகும். எனவே இந்தியாவின் பெரும்பாலான மக்களுக்கு சுதந்திரம் மற்றும் வாய்ப்புகளில் சமத்துவம் இருக்கவேண்டும் என்று விரும்பியதை அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தில் எல்லா பக்கங்களிலும் வடிவமைத்துக் கொடுத்தார். அடிப்படை உரிமைகள் பிரிவு 14 முதல் 30 வரை இவற்றைத் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்துகிறது. அவர் விரும்பிய இந்தியாவில் இரண்டு தீமைகள் முற்றிலும்

ஒழிந்துபோக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவை சாதியமும் மதவாதமும்தான். அவை இந்திய மக்களை அடிமைகளாக்கி, அறிவற்றவர்கள் ஆக்கி மனித மாண்பைச் சிதைக்கின்றன என்று உறுதியாக நம்பினார். மாறாக இந்தத் தீமைகள் ஒழிந்து இந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் கல்வியும். பொருளாதார வளர்ச்சியும் மேலோங்க வேண்டும் என்று விரும்பினார். மேலும் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் எனும் தூண்களின் மீது கட்டப்பட்ட புதிய இந்தியா உருவாகவும், அதன் பிற்போக்குத்தனம் முற்றிலும் துடைத்தெறியப்பட வேண்டும் என்றும் விரும்பினார்.

ஓர் அசாதாரணமான மாற்றத்தை, மிக வேகமான மாற்றத்தை (RADICAL CHANGE) அவர் விரும்பினார். ஆனால் அது வன்முறை யினால் அல்ல, மாறாக, பாராளுமன்ற ஜனநாயக முறைப்படியும், சட்டத்தின் ஆட்சியாலும் அது நிறுவப்பட வேண்டும் என்பதே அவரது விருப்பம். எனவே சமூக பொருளாதார அரசியல் மாற்றத்துக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அடிப்படை மாற்றக் கருவியாகச் செயல்படும் என அவர் நம்பினார்.

இந்தியா அதன் பன்முகத் தன்மையைப் பாதுகாக்க ஓர் ஒன்றியமாகச் செயல்படவும், கூட்டாட்சி அதன் தத்துவமாகவும் இருக்க விரும்பினார். சட்டத்தின் வாயிலாக மனித குலத்தை இழிவுபடுத்தும் தீண்டாமையை ஒழிக்கவிரும்பினார். எல்லோருக்கும் சம உரிமை என்பதை உறுதிப்படுத்தி, சமூக உறவுகளில் எந்த வேறுபாடுகளும் பிரிவினைகளும் காட்டப்படக் கூடாது என்று விரும்பினார். எல்லாவற்றிற்கும் மேலாக, சிறுபான்மையினர் உரிமைகள் மற்றும் நலன்கள் முழுவதுமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். எனவே சமயம், நம்பிக்கை, வழிபாடு இவை முற்றிலும் அடிப்படை உரிமைகள் என்று அறைகூவல் விடுத்தார். ஒரு நீதியான நேர்மையான சமூக ஒழுங்கை (Social Order) உருவாக்கு வதற்காக, இந்தியாவில் அரசுகள் என்ன கொள்கைகள், நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறித்து வைத்தார். கடையனுக்கும் எழுந்தேற்றம் என்பதே இதன் குறிக்கோள். இந்தியாவில் நீதித்துறை முற்றிலும் நியாயமானதாகவும், சுதந்திரமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதுபோல தகுதிபடைத்த அறிவும் ஆற்றல்மிக்க நிர்வாகத் துறை பற்றி கனவு கண்டார்.

சமூகத்தை சீர்படுத்த அனைவரும் ஒத்துழைப்பை நல்கவேண்டும் என எதிர்பார்த்தார். எனவே சமூகரீதியாக, பொருளாதாரரீதியாக பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களைப் பார்த்து ‘‘கற்பி, போராடு, ஒன்றுசேர்’’ என்பது அவரது ஆழமான அறைகூவல். அதுவே அவர் விரும்பிய நவீன இந்தியாவை உருவாக்கும் என்று உறுதியாக நம்பினார். இந்தியாவில் செயல்படும் சுயாட்சி பெற்ற நிறுவனங்களான தேர்தல் ஆணையம், நிதி ஆணையம் மற்றும் பல்வேறு அமைப்புகள் இந்திய ஜனநாயகத் தைத் தாங்கிப் பிடிக்க வேண்டும் என்று விரும்பி, அதற்காக ஏராளமான தன்னாட்சி அதிகாரத்தை அளித்தார். ஆகவே அவர் ‘‘அரசியலமைப்புச் சட்டம் சிறப்பான ஒன்று. ஆனால் அதன் செயல்பாடு அதன் மக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களது அரசியலைப் பொறுத்தே அமையும்’’ என்றார்.

மேற்கூறிய அனைத்தும் இன்று பாசிச மதவாத, சாதியவாத கும்பல்களால், அவர்களது அதிகார வெறியால் தகர்க்கப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டம் குற்றுயிராக்கப்பட்டு, மக்களாட்சி நடைமுறைகள் குரல்வளை நெரிக்கப்பட்ட ஒரு நாடாக நாம் மாறிப் போய் இருக்கிறோம் என்பது அம்பேத்கரின் தியாகத்தையும், அர்ப்பணத்தையும் அர்த்தம் அற்றதாக நாம் ஆக்கி வைத்திருக்கிறோம் என்று உணரமுடிகிறது. எனவே இன்றும் அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள், தொழிலாளர்கள், உரிமை மறுக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் விடுக்கும் அழைப்பு இதுதான், ‘‘கற்பி, போராடு, ஒன்றுசேர்’’. புதிய இந்தியா பிறக்க இதுவே வழி.



# உலகை உயர்விக்கும் உயிர்ப்பு

பணி. **வெ. மரிய அல்போன்ஸ்**

ஜாண் டோமினிக் குரோசன் சிறந்த விவிலிய எழுத்தாளர். கத்தோலிக்கக் கிறிஸ்தவர். அவரது, "வரலாற்று இயேசு: ஒரு மத்தியதரை யூத விவசாயியின் வாழ்வு" மற்றும் "இயேசு ஒரு புரட்சிகர வரலாறு" என்ற நூற்கள் மிகவும் புகழ்பெற்றவை.

இயேசுவைப் பற்றிய முதல் நூல் வெளிவந்த நேரத்தில், அவர் தன் வாழ்வில் தனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றினை விவரிக்கிறார். அதன்படி, இயேசுவிற்கும் டோமினிக் குரோசன் அவர்களுக்கும் இடையில் நடக்கிறது பின்வரும் உரையாடல்.

**இயேசு** : டோமினிக், உன் புத்தகத்தை நான் வாசித்தேன். அது மிகவும் நன்றாக எழுதப்பட்டுள்ளது. இப்போது நீ என் படிப்பினைகளை ஏற்கவும் பணித்திட்டத்தில் பங்கேற்கவும் தயாராக இருப்பாய் என நம்புகிறேன்.

**டோமினிக்** : என்னிடம் அதற்கான துணிச்சல் இல்லை, இயேசுவே! ஆனால், உம் கொள்கைகளையும் பணித்திட்டத்தையும் தெளிவாக விளக்கியுள்ளேன். ஆய்விற்காக நான் பின்பற்றிய அணுகுமுறை மிகவும் நல்லது. இதை ஒத்துக்கொள்கிறீர்களா ஆண்டவரே?

**இயேசு** : நன்றி டோமினிக். உன் இயலாமைக்கு ஏற்றதாக என் படிப்பினைகளைத் திரித்து எழுதாததற்கு நன்றி டோமினிக். இது ஒரு பெரிய செயல்.

**டோமினிக்** : இது போதுமா இயேசுவே?

**இயேசு** : இல்லை டோமினிக். இதுமட்டும் போதாது!

## வாழ்வே இயேசுவின் போதனை

இயேசுவின் படிப்பினைகளைத் தெளிவுற விவரித்து எழுதுவதும் ஈர்க்கும் விதமாகப் போதிப்பதும் தேவை. ஆனால்,அவற்றைத் தாண்டி இயேசுவின் நற்செய்தியை வாழ்வதும், வாழ்வால் போதிப்பதும் இன்றியமையாதவை. வாழ்வது மட்டுமே இயேசுவிற்கு ஏற்புடையது. ''என்னை நோக்கி, 'ஆண்டவரே ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்'' (மத்தேயு 7: 21).

வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் இன்று மயங்கிக் கிடக்கிறது கிறிஸ்தவ சமூகம். எவ்வித வேறுபாடுமின்றி, அனைத்து சபைகளும், தேவையற்ற சடங்குகளில் மூழ்கிக் கிடக்கின்றன. ஆலயத்திற்குள், செபக்கூடாரங்களுக்குள், எழுப்புதல் அரங்குகளுக்குள் அமிழ்ந்து கிடக்கின்றனர் இறைமக்கள்! புரியாததைப் புரியாதவர்கள் புரியாதவர்களுக்குப் புரிய வைப்பதாக ஒலிப்பெருக்கிகளில் உரக்கக் கத்துகிறார்கள். கண்களை மூடக் கட்டளை இடுகிறார்கள். கைகளைத் தட்டச் சொல்கிறார்கள். புதிய மொழிகளில் பேசப் பயிற்றுவிக்கிறார்கள் தாராளமாகக் காணிக்கை தரக் கட்டாயப் படுத்துகிறார்கள். காணிக்கைதான் குறி! இதிலிருந்து எந்த சபையும் இன்னும் விடுதலை பெறவில்லை! கடவுளுக்குக் கடன் கொடுப்பதாகப் பைகளை நிரப்புகிறார்கள். கத்தோலிக்கத் திருஅவையும் இதற்கு விதிவிலக்கல்ல. லாபம் ஈட்டும் வியாபாரமாக மாறி வருகின்றன வழிபாட்டுக் கொண்டாட்டங்கள். இந்த மாயையிலிருந்து இறைச் சமூகம் விடுதலைபெற, வாழ்வாக்கப்பட வேண்டும் விவிலியம்! வாழ்வாக்க விவிலியம் வாசிக்கப்பட வேண்டும்!!

## வாழ்க்கைமுறையில் மாற்றம்

இயேசுவின் நற்செய்தி என்பது விவரித்து, விளக்கப்பட வேண்டிய ஒன்றுமட்டுமல்ல. அது வாழப்படுவதால் மட்டுமே புரிந்து கொள்ளப்படும், ஏற்கப்படும் தகுந்த சான்றாக அமையும். இதைத்தான் துவக்கக் கிறிஸ்தவர்களின் வாழ்வில்

நாம் பார்க்கிறோம். இயேசுவின் நற்செய்திக்கு அவர்கள் முன்மாதியான வாழ்வே நற்சான்றாக அமைகிறது. இயேசுவில் நம்பிக்கை கொண்டவர்கள் “ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது… அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெற்றிருந்தனர். தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை…” (திருத்தூதர்பணி 4: 32-37 மற்றும் 2:42-47).

## இயேசுவில் மலரும் புதுவாழ்வு

உயிர்த்த இயேசுவைப் பின்பற்றியவரின் வாழ்க்கை முறை, மேற்கூறியபடி, திருத்தூதர் பணிகள் நூலில் இருமுறை விவரிக்கப் படுவதிலிருந்தே, எடுத்துக்காட்டாக வாழ்வதுதான் இயேசுவிற்கான தகுந்த சான்று என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். எனவே, கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் நற்செய்தி என்பது விவாதப் பொருள் அன்று; அது நம்பிக்கை கொண்ட மக்களால் வாழப்பட்டது; வாழ்க்கை முறையால் அறிக்கையிடப்பட்டது. எனவே, இயேசுவில் மலர்கிறது புதிய வாழ்வு. “இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்” (உரோமையர் 6:4).

கிறிஸ்துவில் நாம் அடையும் புதுவாழ்வு மூன்று நிலைகளில் நம்மை நிறைவடையச் செய்கிறது. இவை யாவும் வழிபாடுகளைத் தாண்டியவை. வழிபாட்டு நிகழ்வுகளோடு தொடர்புடையவை. இருப்பினும், வழிபாட்டுச் சடங்குகளை மையப்படுத்தாதவை. இவற்றை எவரும் பின்பற்றலாம். கிறிஸ்தவ சபைகளில் உறுப்பினராக இருக்கத் தேவையே இல்லை. விவிலியம் வாழ்வாக்கப்பட சபைகள் எதற்கு?

### 1. விடுதலை

அகமும் புறமும் சுதந்திரம் தருகிறது இயேசுவில் நாம் பெறும் புதுவாழ்வு. இதயத் தூய்மை சுதந்திரத்தின் அடித்தளம். இது மனச்சான்றிற்கு ஏற்புடைய வாழ்வால் விளைகிறது. வாய்மை, உண்மை, நேர்மை என்பவை அகத்தூய்மையின் பயன்கள். “உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்” (யோவான் 8: 32) என இயேசு அருள்வதும் இதனால்தான்! கிறிஸ்துவே அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவிப்பவர். உரிமை வாழ்வை மனிதருக்கு அருள்பவரும் அவரே. காரணம்: “வாழ்வைப் பெறும் பொருட்டு,அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு” (யோவான் 10:10) மனிதராகத் தோன்றியவர் இயேசு. நிறைவாழ்வு என்பது இயேசுவை முழுமையாக அறிதலும் அவர் தரும் வழிமுறைகளைப் பின்பற்றுவதும் என்பது இதனால் தெளிவாகிறது.

அகவிடுதலை பெற்றவர்கள் ,தாம் பெற்ற பெருவாழ்வைப் பிறரோடு பகிர்ந்து கொள்கிறார்கள். இது மதமாற்றம் அல்ல மனமாற்றம். இதில் கட்டாயம் என்பது இல்லை. விடுதலை அனுபவத்தைக் கேட்பவர்கள் தாங்களாகவே தீர்மானிப்பதால் நிகழ்வதுதான் மனமாற்றம். எண்ணிக்கையால் வளர்வதன்று கிறிஸ்தவம். உறுப்பினர் வாழ்க்கை நெறிகளால் நிர்ணயிக்கப்படுகிறது கிறிஸ்தவத்தின் தரம். எனவேதான், அகவிடுதலை கிறிஸ்தவ வாழ்வின் முதல் படியாகக் கருதப்படுகிறது.

### 2. தோழமை

அகச்சுதந்திரம் அடைந்தவர்களின் தோழமைதான் கிறிஸ்தவம். இங்கு ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமில்லை பிளவுகள் அனுமதிக்கப்படுவதில்லை. “இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் இல்லை. கிறிஸ்துவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்” (கலாத்தியர் 28). இத்தகைய அடிப்படையான தோழமையை உருவாக்கியவர் இயேசு.

தமது இறுதி இரவு உணவின்போது சீடர்களின் பாதங்களைக் கழுவி ஓர் எதிர்ப்புக் கலாச்சாரம் உருவாக்கியவர் இயேசு. “ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்” (யோவான் 13: 14-15). இயேசு வருவித்த புரட்சி என்பது சீடரோடு அவர்

உருவாக்கிய தோழமையில் துலங்குகின்றது. இதை வாழ்வதுதான் இயேசுவின் உயிர்ப்பைத் தொடரச் செய்யும்.

இயேசு உயிர்த்த பின் முதலில் ஒரு பெண் மகதலா மரியாவைச் சந்திப்பதிலிருந்து நாம் அவரது தோழமையின் ஆழத்தை அறிந்து கொள்ளலாம் (யோவான் 20: 11-18). இவ்வாறு பெண் ஒருவரே இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சி.

பெண்களின் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளாத யூத சமூகத்தில், அடிமையாகக் கருதப்பட்ட பெண் ஒருவரிடம் தம் உயிர்ப்பைத் தமது சீடர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை வழங்குவது புரட்சியும் புதுமையும் நிறைந்த தோழமை. இத்தகைய தோழமையை வாழ்வாக்குவது கிறிஸ்தவத்திற்கு உயிர்த்த ஆண்டவர் வழங்கும் முதல் சவால். சாதி, இனம், ஆண் - பெண் எனப் பிளவுண்ட, அடிமைப்பட்ட சமூகம் இயேசு ஆண்டவருக்கும் விடுதலை வழங்கும் அவரது நற்செய்திக்கும் சான்று பகர இயலாது.

## 3. நீதி

இயேசுவை நம்புகிறவர்கள் தங்களுக் கிடையே வளர்க்கும் தோழமையோடு முடிவதில்லை கிறிஸ்தவக் கடமை. அது தங்களையும் தாண்டி, இப்பூவுலகைத் தொடவேண்டும் இந்த உலகைப் புதுப்பிக்க வேண்டும். இந்தப் புதிய உலகை, "இறையாட்சி" என இயேசு முழங்கினார். இதன் தன்மை சமயம் சார்ந்ததே அல்ல. அது சமூக அமைப்பு சார்ந்தது. இதை லூக்கா நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம்: "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக்கா 4:18-19). இந்தப் பகுதியின் விளக்கமாக மத்தேயு நற்செய்தி இறையாட்சிக்குத் தகுதியுடையவர்களைப் பட்டியலிடுகிறது "ஏனெனில், நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்; நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன், என்னைத் தேடிவந்தீர்கள் என்பார்" (மத்தேயு 25:35-36).

சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள், பலிகள், படையல்கள் எதையும் கடவுள் கேட்கவில்லை. அவர் மனிதரிடம் விரும்பித் தேடுவதெல்லாம் நீதியில் விளையும் இரக்கம்; இரக்கத்தில் கட்டப்படும் நீதி: "பலியைஅல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" (மத்தேயு 9:13). இதுவே இறைவாக்கினர் ஒவ்வொருவரும் ஒலித்த குரல்: "நீதி வெள்ளமெனப் பொங்கிவருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்துவருக!" (ஆமோஸ் 5: 24).

## இறைவன் உறையும் உலகு

தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ், நீதியில் கனியும் இரக்கத்தையும், இரக்கத்தில் நிலைபெறும் நீதியையும் வலியுறுத்துகிறார். அவரது வேண்டுகோள், நீதியும் இரக்கமும் மனிதரையும் கடந்து, இயற்கையை அரவணைக்கிறது. "எல்லாப் புகழும் உமதே" என்னும் அவரது திருமடல், இயற்கையைப் பாதுகாப்பது என்பது மனித இனத்தையே பாதுகாப்பது என விவரிக்கிறது (எண்: 6). எனவே, நீதியும் இரக்கமும் யாவருக்கும் பொதுவானவை. அது மனச்சான்றில் வேரூன்றி, தோழமையாகத் தளிர்த்து, நீதியாகக் கனிகிறது. ''நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது'' (யோவான் 16:8) என்கிறார் இயேசு. எனவே, இறைவன் உறையும் உலகாக நம் புவிதனைப் புதுப்பிப்போம்! முழு மனித விடுதலை, நட்பு நிறைந்த தோழமை, நீதியில் கனியும் இரக்கம் நிலைபெற உலகை உயர்விக்கும் உயிர்ப்பிற்குச் சான்று பகர்வோம்.



# பரவட்டும் பகிர்தல் பண்பாற்றல்

குமரி ஆதவன்

'**ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்**' என்கிறது திருக்குறள். பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைபிடிப்பதை விட பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும் என்கிறார் வள்ளுவர். பகிர்தல் என்னும் அறச்செயலை உலகிற்குக் கற்றுத் தந்ததே தமிழர்தான். மணிமேகலை காப்பியமே பசித்தோர்க்குப் பகிர்தல் பண்பைச் சொல்லித் தந்த கதைதான். அன்று பசித்தோருக்கு உணவாய் அமுதசுரபி இருந்தது. இன்றும் பசித்தோர் உணவு என்ற அமைப்பைக் கருங்கல் பகுதியில் ஜார்ஜ் அவர்கள் நடத்தி வருகிறார்கள். நாடு முழுவதும் யாரோ ஒரு சிலர் இத்தகைய அன்புப் பணியில் அக்கறையோடு செயலாற்றுகிறார்கள். சங்கப் பாடல்களில் குறிஞ்சி, முல்லைத் திணைகளில் வேட்டை, உணவு கண்டடைதல், அவற்றைப் பகிர்தல் இவை முதன்மையானதாக இருந்திருக்கிறது. இனக்குழு வாழ்க்கையில் பகிர்தல் என்கிற பொதுவுடமை வாழ்வு இருந்ததற்கு சங்க இலக்கியங்கள் இன்றைக்கும் சான்றாக நம்மிடம் இருக்கின்றன.

ஒரு பத்திரிகையின் புள்ளி விவரக் கணக்குப்படி, இன்றைய சூழலில் பகிர்தல் குணம் 13 விழுக்காடு பேரிடம் மட்டுமே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலங்களில் பகிர்தல் குணம் ஐந்து விழுக்காடு அதிகரிப்பதாகவும் அதில் தெரிவிக்கப் பட்டிருந்தது. அப்படியென்றால் 82 விழுக்காட்டினர் தான் என்ற சுயநலத்தோடு வாழ்கிறார்கள், செயல்படுகிறார்கள் என்பது புரிகிறது.

ஓர் ஊரில் ஒரு நல்லவன் இருந்தாலும் அவனுக்காக மழை பெய்யும் என்பார்கள். இந்தக் கொள்கைப்படிதான் உலகம் அழியாமல் இருக்கிறது எனக் கருதுகிறேன். மேற்குறிப்பிட்ட சில விழுக்காடு மனிதர்களின் மனிதநேய குணம், பசித்தோர்க்கு உணவு, தேவையில் இருப்பவருக்கு உடைத் திட்டங்களாய் ஆங்காங்கே மின்னுகின்றன. எங்கோ ஒரு சில இடங்களில் விழாக்களின் போது ஆடம்பரங்களைக் குறைத்து ஏழைக்கு வீடு திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள்.

இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றும் சகோதரர்கள் ஓராண்டு முழுவதும் தம்முடைய வருவாயில் ஒரு சிறு பங்கை எடுத்து ஒதுக்கி வைத்துக்கொண்டு, நோன்பு நாட்கள் மற்றும் ரம்ஜான் பண்டிகை வருகிற தினங்களில் அதைப் பகிர்ந்து ஏழைகளுக்குக் கொடுக்கிறார்கள். இந்தப் பகிர்தல் பண்பாட்டில் அனைத்து இஸ்லாமியர்களும் அவர்களது வருவாய்க்கு தகுந்தார்போல் ஈடுபாடு காட்டுகிறார்கள். இந்தப் பண்பாற்றல் ஆதிக் கிறிஸ்தவர்களிடம் இருந்ததுதான். அனைத்தையும் 'எல்லாம் எல்லாருக்கும்' என்ற பொதுவுடமை நோக்கில் செய்தார்கள். அந்த அறவாழ்வு இன்று நம்மிடமிருந்து அகன்று போய், சுயநல வாழ்வு மேலோங்கியுள்ளது. இது கிறிஸ்தவத்தின் அடிப்படையை நாம் இழந்து வருகிறோம் என்பதையே காட்டுகிறது.

வள்ளல் குமணனையும், சிபி சக்கரவர்த்தியையும், காமராசர், அன்னை தெரசா போன்ற உயர்ந்த மகான்களையும் படித்த நம் சமூகம் கையை மடக்கிக் கொண்டதன் பின்னணி என்னவென்று ஆராய்ந்தால் எல்லாம் எனக்கு மட்டும் வேண்டும் என்ற நுகர்வு வெறிதான். எத்தனை கோடி பணம் இருந்தாலும், எத்தனை ஏக்கர் நிலம் இருந்தாலும், சில நூறு எண்ணிக்கைகளில் ஆடைகள் இருந்தாலும், வசிப்பதற்கு வீடு வசதியாக இருந்தாலும், போதும் என்ற மனம் வருவதே இல்லை. இங்கு கார்ப்பரேட்டுகளின் வெறியூட்டல் பலரை நிறைவற்றவர்களாக மாற்றியுள்ளன. இதனால் தனக்கு, தான் என்ற எண்ணம் தவிர எல்லோருக்கும் என்ற எண்ணம் மனிதர்களுக்கு வருவதே இல்லை.


எந்தப் பறவைகளும் கூடு கட்டி வாடகைக்கு விடுவதில்லை. மனிதன்தான் பல வீடுகள் கட்டினாலும் ஆசை அடங்காமல் அலைந்து கொண்டிருக்கிறான். இதனால் தனக்கு ஏற்படுகிற சுய இழப்பு குறித்து படுக்கையில் ஆகும் வரை அவன் உணர்வதே இல்லை. தானும் வாழாமல், பிறரையும் வாழ விடாமல், சேர்ப்பதிலேயே குறியாக இருக்கும் மனிதன் அடுத்த தலைமுறைக்கென்று சேமித்து விட்டு, ஒரு நாள் கூட மகிழ்ச்சியாக வாழாமல் போய்விடுகிறான் என்பதுதான் இன்றைய உண்மை நிலை.

"இரு கையால் ஈட்டுபவர்களே, ஒரு கையாலேனும் பிறருக்குக் கொடுங்கள்" என்கிறான் ஒரு கவிஞன். எல்லாவற்றையும் இந்த இயற்கையில் இருந்துதான் நாம் பெற்றுக் கொள்கிறோம். எல்லாவற்றையும் இயற்கையிடம் கொடுத்துவிட்டு இயற்கையோடு கரைந்து போகப் போகிறோம். நாம் இறந்த பிறகு ஒரு ஜோடி செருப்புக்கு இருக்கிற மரியாதை கூட நமக்கு இருக்கப்போவதில்லை. வாழுகிற காலத்தில் நாம் செய்கிற தொண்டும் பகிர்வும்தான் நாம் இறந்த பிறகு நம்மோடு வரப்போகிறது.

சுமார் 14 ஆண்டுகள் காட்டில் தவம் செய்துவிட்டு முனிவர் ஒருவர் வீடுகள் இருந்த கிராமத்திற்கு வந்தார். மிகவும் களைப்புற்றிருந்த அவர் ஒரு பாட்டியின் குடிசையின் முன்னால் உட்கார்ந்தார். பாட்டி பேத்தியிடம் சொல்லி நீராகாரம் கொண்டு கொடுத்தார். அப்போது தூரத்தில் அழுகை சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. சாமியார் பாட்டியைப் பார்த்து, 'அங்கே ஏன் அழுகிறார்கள்?' என்று கேட்டார். பாட்டி நீங்கள் காட்டில் இருந்து வருவதால் உங்களுக்கு விவரம் தெரிய வாய்ப்பில்லை. இந்த ஊரில் ஓர் ஆசிரியர் இருந்தார். அந்த ஆசிரியர் இன்றைக்கு இறந்து போனார். அவருடைய இறப்புக்காக அழுகிறார்கள் என்றாள். உடனே சாமியார் தன் போக்கில், 'இந்த ஆன்மா சொர்க்கத்துக்குப் போகுமோ? நரகத்துக்குப் போகுமோ?' என்று புலம்பினார். உடனே பாட்டி முனிவரைப் பார்த்து, 'நீங்கள் 14 ஆண்டுகள் காட்டில் தவம் செய்து விட்டு வருவதாகச் சொன்னீர்கள். ஆசிரியர் ஆன்மா சொர்க்கத்துக்குப் போகிறதா? நரகத்துக்குப் போகிறதா? என்று உங்களுக்கு தெரிய வில்லையா' என்றாள். முனிவர், 'எனக்குத் தெரியவில்லை. அப்படிக் கண்டுபிடிக்க இயலுமா?' என்றார். உடனே பாட்டி, பத்து நிமிடம் பொறுத்திருங்கள். என்னுடைய பேத்தி கண்டுபிடித்து வருவாள்' என்றார். பேத்தியை அழைத்த பாட்டி, 'மாசிலாமணி வாத்தியார் ஆன்மா சொர்க்கத்துக்கு போகிறதா நரகத்திற்கு போகிறதா என்று பார்த்துவிட்டு வா' என்றார். ஓடோடிச் சென்ற பாட்டியின் பேத்தி பத்து நிமிடத்தில் திரும்பி வந்து, 'மாசிலாமணி வாத்தியார் ஆன்மா சொர்க்கத்துக்கு போகிறது' என்றாள். ஆச்சரியப்பட்டு போன முனிவர் இதை எப்படி கண்டுபிடித்தீர்கள் என்றார். 'இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. மாசிலாமணி வாத்தியார் வீட்டில் அழுது கொண்டிருந்தவர்கள்

பக்கத்தில் கொஞ்ச நேரம் நிற்க வேண்டும். அதற்குப் பிறகு வெளியில் இருந்து பேசிக் கொண்டிருந்தவர்கள் அருகில் சிறிது நேரம் நின்று என்ன பேசுகிறார்கள் என்று காது கொடுத்துக் கேட்க வேண்டும். நிறைவாக கல்லறை தோட்டத்தில் போய் அங்கு நிற்கிறவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்க வேண்டும். 'மாசிலாமணி வாத்தியார் இன்னும் பத்து ஆண்டுகள் கூட உயிர் வாழ்ந்திருக்க மாட்டாரா! இன்னும் எத்தனையோ பேருக்கு தன்னிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுத்தி ருப்பாரே; நல்ல மனுஷர் போயிட்டாரே!' என்று பேசினால் அவர் ஆன்மா சொர்க்கத்துக்குப் போகிறது என்று அர்த்தம். 'படுபாவி, மகா கஞ்சன் தொலைஞ்சான்' என்று பேசினால் அவர் ஆன்மா நரகத்திற்குப் போகிறது என்று அர்த்தம். சொர்க்கமும் நரகமும் இவ்வளவுதான் சாமி என்றாள் பாட்டி!

பகிர்தல் என்றால் வெறும் பொருள் பகிர்வு மட்டுமல்ல. அதைவிட மேலானது



அன்பைப் பகிர்தல். எத்தனையோ மனிதர்கள் அன்பு கிடைக்காமல் மன நோயாளிகளாக அலைகிறார்கள். தற்கொலை செய்து கொள்பவர்களில் அன்பு கிடைக்காமல் தற்கொலை செய்பவர்கள்தான் அதிகம். அன்பைப் பகிர்பவர்களால்தான் மற்ற எல்லாவற்றையும் பகிர முடியும். இதைத் தன் வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டியவர் அன்னை தெரசா. அன்பு கிடைக்காத அனாதை களுக்கெல்லாம் அன்பைக் கொட்டிக் கொடுத்து ஆதரவற்றவர்களின் அன்னையாய் மாறினார். அதனால்தான், 'அன்னையே! நீ கருத்தரித் திருந்தால் ஒரு சில குழந்தைகளுக்குத் தாயாகி இருப்பாய்; கருத்தரிக்காததால் பல்லாயிரம் பேருக்கு அன்னையானாய்!' என்று ஒருவர் எழுதினார்.

அன்பைப் பகிர்ந்தால் மனம்சிறக்கும்;
அறிவைப் பகிர்ந்தால் மதிசிறக்கும்;
இன்பம் தன்னைப் பகிர்ந்திட்டால்
எல்லோர் வாழ்வும் நனிசிறக்கும்;

நல்ல பண்பைப் பகிர்ந்திட்டால்
நாட்டின் ஒழுக்கம் மிகச்சிறக்கும்;
சொல்லைச் சுவையாய்ப் பகிர்ந்திட்டால்
சொந்தம் பந்தம் மிகச்சிறக்கும்;

உண்மை நெஞ்சைப் பகிர்ந்திட்டால்
உலகில் வாய்மை உயர்ந்தோங்கும்;
மென்மை உணர்வைப் பகிர்ந்திட்டால்
மேதினி அமைதி உயர்ந்தோங்கும்;

மனித நேயம் பகிர்ந்திட்டால்
மண்ணில் நிலவும் சமாதானம்;
புனித கருணை பகிர்ந்திட்டால்
புவியில் என்றும் ஆனந்தம்!

என்ற கே.பி.பத்மநாபன் அவர்களின் கவிதை எதையெல்லாம் நாம் இந்த மண்ணில் பகிர வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. இந்த அறவாழ்வை மேற்கொள்வோம்; பாரெங்கும் பரவட்டும் பகிர்தல் பண்பாடு.

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்

## 01. கிறிஸ்தவ வாழ்வுப்பணிக்குழு

### மறைக்கல்விபணிக்குழு

☆ முளகுமூடு மறைவட்டத்தில் ஒரு மறைக்கல்வி மன்றம் அருகாமையில் இருக்கும் இன்னொரு மறைக்கல்வி மன்றத்தைச் சந்தித்து உற்சாகப்படுத்தும் பணிசிறப்புப் பணியாக நடைபெறுகிறது.

☆ 16.02.2025 - வேங்கோடு மறைவட்ட மறைக்கல்வி ஆண்டுவிழா கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மறைமாவட்ட முதன்மைப்பணியாளர், கிறிஸ்தவவாழ்வு பணிக்குழுசெயலர், மறைவட்ட இயக்குநர், அருள்பணியாளர்கள் பங்கேற்று வாழ்த்து ரைகள் வழங்கினார்கள். ஒரு பங்கிற்கு ஒரு நிகழ்வு என்ற அடிப்படையில் கிராமியக் கலைநிகழ்வுகள் வழங்கப்பட்டு, தரவரிசையின் அடிப்படையில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

☆ மேல்பாலை (ஆசிரியர்களுக்கு), மூலச்சல் (ஆசிரியர்களுக்கு), சிலுவைபுரம் (மாணாக்கருக்கு) ஆகிய பங்குகளுக்குப் படைப்பாற்றலுடன் பாடம் நடத்தும் முறைகள், மறைக்கல்வியின் முக்கியத்துவம் ஆகிய சிந்தனைகளில் திருமதி. டயானா கிறிஸ்டி, திருமதி. பியூலா, திரு. ஜெயப்பிரகாஷ், திரு. அலேசியஸ் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

☆ மறையாசிரியர்களுக்கான அடிப்படை மறைப்பயிற்சி (BTCT) நடைபெற்றது. 132 பேர் பங்கேற்றனர். மாத்திரவிளை மறைவட்ட இயக்குநர் அருள்பணி. ஆன்றூஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கி மறையாசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

☆ 01.02.2025 - மறைமாவட்டப் பள்ளி மறைக்கல்வி நன்னெறி சிறப்புத் தேர்வு புனித ஜோசப் மே.ப. திரித்துவபுரம், புனித ஜோசப் மே.ப. முளகுமூடு ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. 987 மாணாக்கர்கள் பங்கேற்றார்கள்.

☆ 21.02.2025 - மறைமாவட்டப் பள்ளி மறைக்கல்வி நன்னெறி ஆண்டுவிழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உளவியல் வல்லுநர் செல்வி. மு. மர்சலின் ரெஜிலா அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். வாழ்த்துரைகளும் மாணாக்கரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

### விவிலியப் பணிக்குழு

☆ 15,16 ஆகிய இரு நாட்கள் சிவகங்கையில் நடைபெற்ற மாநில VBS கருத்தாளர் பயிற்சியில் குழித்துறை மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு கருத்தாளர்கள் 6 பேர் பங்கேற்றார்கள்.

☆ 26.02.2025 - நமது மறைமாவட்டதில் VBS கருத்தாளர் பயிற்சி நடைபெற்றது. விவிலிய வினாடிவினா வேங்கோடு மற்றும் மாத்திரவிளை மறைவட்டங்களில் நடைபெற்றது.

## 02. சிறார் பணிக்குழு

☆ 01.02.2025 - மறைமாவட்டக் கருத்தாளர்களுக்கு “இயேசுவின் இலட்சியப் பாதையில் பயணித்து நிறைவாழ்வு அடையும் சிறார்களாக” என்னும் சிந்தனையில் அருள்பணி. மேரி ஜாண் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. மறைமாவட்ட, புத்தன்கடை, முளகுமூடு, திரித்துவபுரம் மறைவட்டங்களின் இயக்குநர்கள், களப்பணியாளர்கள் உட்பட 51 பேர் பங்கேற்றனர்.

☆ 11.02.2025 - முளகுமூடு மறைவட்டத்தின் முளகுமூடு மண்டல மாநாட்டில் “இறைவேண்டலில் இறைத்திருஉளம் காணும் சிறார்கள்” என்னும் சிந்தனையில் அருள்பணி.

கிளாசின் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. மறைமாவட்டப் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர், மறைவட்ட இயக்குநர், அருள்பணியாளர்கள், களப்பணியாளர்கள், வழிகாட்டிகள், சிறார்கள், பெற்றோர்கள் என 490 பேர் பங்கேற்றனர்.

☆ பங்களவில், ''இயேசுவின் இலட்சியப் பாதையில் பயணித்து நிறைவாழ்வு அடையும் சிறார்களாக'' என்னும் சிந்தனையில் 02.02.2025 - கல்குறிச்சி, 09.02.2025 - சூழால், தாறாத்தட்டு, நட்டாலம், முள்ளங் கனாவிளை, மாங்கரை, செறுகோல், 16.02.2025 பாலவிளை ஆகிய பங்குகளிலும், 23.02.2025 - புத்தன்கடை பங்கில் ''இயேசுவின் இலட்சியம்'' என்ற சிந்தனை யிலும் செல்வியர் அஜிதாரூபி, சகாய ஜாஸ்மின், திருமதியாளர்கள் சுஜா, ஜோஸ்பின் விப்சி, சுசீலா, பியூலா, சகாயமோனிஹுட் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## 03. இளைஞர் பணிக்குழு

### இளைஞர் இயக்கம்

☆ 09.02.2025 - திரித்துவபுரம், வேங்கோடு, 16.02.2025 - புத்தன்கடை, முளகுமூடு ஆகிய மறைவட்டப் பொதுக்குழு கூட்டங்களில் ''ஒரே நாடு ஒரே தேர்தல்'', ''இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்'', ''சமூகத்தில் நமது அடையாளம்'', ''புற்றுநோய்'' என்ற சிந்தனைகளில் திரு. பென்சிகர், பணி. அருள் மனோ, சகோ. தெய்வமலர், திருமதி. டபா ஆகியோர் பயிற்சிகள் வழங்கினார்கள்.

☆ 09.02.2025 - மூலச்சல், 16.02.2025 - பாலவிளை, வர்த்தான்விளை, 23.02.2025 - பாக்கியபுரம் ஆகிய கிளைகளில் இலட்சியம் குறிக்கோள், ஜுபிலி ஆண்டும் நமது பணியும், ஊடக விழிப்புணர்வு இயக்கம் இயக்க நோக்கம் ஆகிய சிந்தனைகளில் கிளைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### இ.கி.மா/இ.மா

☆ 16.02.2025 - ஆறு மறை வட்டங்களின் பொதுக்குழுக் கூட்டங்களில் தேர்வை எதிர்கொள்வது எப்படி?, நம் நலம் நம் கையில், தேர்வுக்குத் தயாரிப்பு, சேமிப்பு ஆகிய சிந்தனைகளில் திரு. ராபர்ட், வேதியர் ஏசுதாசன், திரு. ரோஸ் ரோபின், திரு. ரெஞ்சித், திருமதி ஜிஜி ஆகியோர் பயிற்சிகள் வழங்கினார்கள்.

☆ 11.02.2025 முழுநாள் எழுத்தாளர் பயிற்சி நடைபெற்றது. அறிமுக எழுத்தும் சிறுகதை உருவாக்கமும் என்ற தலைப்பில் திரு. ஆன்றணி ஜோசப் பயிற்சியளித்தார்கள்.

## 04. அன்பியப் பணிக்குழு

☆ 20.02.2025 - வசந்தபுரம் பங்கில் களப்பணி நடைபெற்றது. 6 களப் பணியாளர்கள் 83 இல்லங்களைச் சந்தித்து செபித்து அன்பியக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

☆ 23.02.2025 - செல்லங்கோணம் பங்கு ஒருங்கிணைய உறுப்பினர்களுக்கு திரு. டேவிட் அவர்களால் முதல் அமர்வில் ''தலைமைத்துவ வாழ்வும் கடமைகளும்'', ''நோயில்லா வாழ்வு, பகையில்லா வாழ்வு, கடன் சுமையில்லா வாழ்வு'' ஆகிய சிந்தனைகளில் பயிற்சி வழங்கப்பட்டது.

☆ 23.02.2025 - வேங்கோடு மறைவட்டப் பொதுக்குழுவில்''தலைமைத்துவம்'' என்ற சிந்தனையில் திரு. அமலநாதன் அவர்கள் பயிற்சியளித்தார்.

☆ நடைபெற்ற சங்கம விழாக்கள் : சுங்கான்கடை (09.02.2025), அமலாபுரம் (23.02.2025), வசந்தபுரம் (23.02.2025).

☆ பொதுத்தேர்வில் வெற்றிக்கான படிநிலைகள், பொதுத்தேர்வு கால இறைவேண்டல், கவிதைப் போட்டிகள் - இவற்றிற்கான யூடியூப் ஒளிப்பரப்பும், வாட்ஸ்அப் செய்தியும் இறைமக்களுக்கு அனுப்பப்பட்டன.

☆ கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ.3,85,421.00 வழங்கப்பட்டது.

**05. தொழிலாளர் பணிக்குழு**

☆ 02.02.2025 - தோய்வடைந்த புலியூர்குறிச்சி, முளகுமூடு, 09.02.2025 - திரித்துவபுரம் ஆகிய கிளை இயக்கங்களைக் களப்பணியாளர் மற்றும் மறைமாவட்ட நிர்வாகிகள் இணைந்து சந்தித்து "நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதால் அரசிடமிருந்து பெறக்கூடிய பயன்கள்" என்ற சிந்தனையில் பயிற்சியும் அளித்தனர்.

☆ 09.02.2025 - வட்டம், நுள்ளிவிளை(கா) ஆகிய பங்குகளில் "நலவாரியம்" "தொழிலாளர்களின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள்" என்ற சிந்தனையில் களப்பணியாளர் மற்றும் மறைமாவட்ட நிர்வாகிகள் இணைந்து பயிற்சி வழங்கினர்.

☆ 27.02.2025 - செம்பருத்திவிளை ஆலயத்தில் வைத்து வெளிநாட்டில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கான நலவாரியப் பதிவு முகாம் நடத்தப்பட்டது.

**06. நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு**

☆ சனவரி 06, 07 ஆகிய தினங்கள் செந்தறை, பிப்ரவரி 16,17 ஆகிய நாட்களில் பூட்டேற்றி ஆகிய ஆலயங்களிலும், பிப்ரவரி 09,10,11 ஆகிய நாட்களில் லூர்து அன்னை தியான இல்லம், திக்கணங்கோட்டிலும் சிறப்பு நற்செய்திக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**07. சிறைப்பணிக்குழு**

☆ சிறையில் இருக்கும் நான்கு இல்லவாசிகளின் குடும்பங்ளின் உறவினர் களோடு உரையாடி இல்லவாசியை மீட்கும் வழிமுறைகள் பகிரப்பட்டன.

அடுத்த இதழ் "**உழைப்பாளிகளாய் உன்னதமானவர்களாய்**" என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. புத்தாண்டு முதல் நமது புதிய தேடல் இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தங்களது கவிதை, கட்டுரை, கதை. துணுக்குள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-04-2025** - ம் தேதிக்கு முன் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஆசிரியர்**
**புதிய தேடல்**


நட்டாலம்
புனித தேவசகாயம்
30-03-2025 ஞாயிறு, 31-03-2025 திங்கள் ஆகிய இரு தினங்கள் தவக்கால சிறப்பு அருங்கொடை தியானம், நற்செய்தி கொண்டாட்டம்
7339475959
St. Devasahayam Shrine Nattalam

# Engagements of the Bishop: March 2025

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Feast Mass | Chemparuthivilai | 06.30 pm |
| 02 | Contact Visit & confirmation Mass | Vettuvenni | 04.00 pm |
| 04 | Feast Mass | Vettuvenni | 11.00 am |
| 05 | Ash Wednesday Mass | Mulagumoodu | 06.15 am |
| 08-13 | Retreat Preaching | Changanassery | |
| 15 | Celebration at Medical College | Muttom | 09.30 am |
| | Finance Committee Meeting | Bishop's House | 03.00 pm |
| | Vespers | Aralvaimozhi | 06.00 pm |
| 19 | Feast Mass – Cluny Convent | Unnamalaikadai | 07.00 am |
| | Contact Visit & Confirmation Mass | Manchady | 05.00 pm |
| 20 | College Day, Nanjil Catholic College Arts & Science | Kaliakkavilai | 10.00 am |
| 22 | College Day, Morning Star Polytechnic College | Chunkankadai | 10.00 am |
| 23 | Jubilee Function, Vincent De Paul | Elanthavilai | 03.00 pm |
| 25 | Mass for CLC Commission | Nattalam | 11.30 am |
| | Episcopal Ordination | Neyyatinkara | 03.30 pm |
| 29 | Mass for CRI – Infant Jesus College | Mulagumoodu | 10.00 am |
| 31 | Meeting | Tindivanam | |


பென்னி குரியாகோஸ்
அபிஷேகம்
கோல்டு & டைமண்ட்ஸ்
SM Arcade, பம்மம், மெயின் ரோடு
மார்த்தாண்டம்
9080752280, 7603928217
மெயின் ரோடு
பாலராமபுரம்
9388932662
மெயின் ரோடு
அங்கமாலி
9526561342
விழிஞ்ஞம் ரோடு
பாலராமபுரம்
7907032712

Date of Publishing : **19-03-2025**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office




Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode